# உதயன்

சுடர் : 36 | கதிர் : 285 | வியாழக்கிழமை | ஆவணி 23 ஆம் நாள் 09 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111




## கருத்தரிப்பதை தாமதியுங்கள்!

*மருத்துவ வல்லுநர் கோரிக்கை*

கொழும்பு, செப். 9
கொரோனா வைரஸின் டெல்டா திரிபு பரவுவதால் பெண்கள் முடிந்தால் ஒரு வருடத்துக்கு கருத்தரிப் 19 ➤

# கொரோனா சாவின் பிடிக்குள் யாழ்ப்பாணம், வவுனியா

## ஒரே வாரத்தில் 97பேரை பலியெடுத்தது

## சடலங்கள் எரிக்க முடியாமல் தேக்கம்!

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 9
வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இந்த மாதத்தின் முதல் 8 நாள்களில் உயிரிழப்புக்கள் சடுதியாக அதிகரித்துள்ளதாக சுகாதாரத்துறை புள்ளிவிவரங்களிலிருந்து அறிய முடிகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 52பேரும், வவுனியா மாவட்டத்தில் 45பேரும் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். 19 ➤

## யாழ்ப்பாணத்தில் கொரோனா 'போக்குக்' காட்டுகின்றதாம்

· சொல்கிறார் மாவட்டச் செயலர்



யாழ்ப்பாணம், செப். 9
யாழ்ப்பாணத்தில் கொரோனா குறைந்து செல்லும் போக்கை அண்மையில் காண்பித்தது. ஆனால் தற்போது அது ஏற்ற இறக்கமாக மாறியிருக்கின்றது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் 19 ➤

## அபிவிருத்தித் திட்டங்களை ஆராய வருகிறார் நாமல்

யாழ்ப்பாணம், செப். 9
இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச யாழ். மாவட்டத்துக்கான கண்காணிப்புப் பயணமொன்றை இன்று மேற்கொள்ளவுள்ளார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அமைச்சர் நாமல், அபிவிருத்திக் கூட்டிணைப்பு 19 ➤

கட்சி மானத்தை காப்பதற்காக

## மாகாணசபையை குழப்பியோரை நான் காட்டிக் கொடுக்கமாட்டேன்

அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 9
மாகாண சபை நிர்வாகத்தை யார் யார் குழப்பினார்கள். எவற்றை எல்லாம் குழப்பினார்கள்? அவற்றின் பின்னணியில் யார் யார் இருந்தார்கள்? என்ற நூற்றுக்கணக்கான 19 ➤

## கைதடி அரச முதியோர் இல்லத்தில் கொரோனாவால் 5 பேர் இதுவரை சாவு

யாழ்ப்பாணம், செப். 9
கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருந்தவர்களில் 5பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். நேற்றும், நேற்றுமுன்தினமும் ஒவ்வொருவர் உயிரிழந்துள்ளனர். முதியோர் இல்லத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட அன்டி 19 ➤

## யாழ். பல்கலை பட்டமளிப்பு விழா கொரோனாவால் இடைநிறுத்தம்!

*நிகழ்நிலையில் நடத்துவது பற்றியும் ஆராய்வு*

யாழ்ப்பாணம், செப். 9
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி கொரோனா இடர்நிலைமையைக் கருத்திற் கொண்டு இடைநிறுத்தப்பட் 19 ➤

## யாழ்ப்பாணத்தில் நேற்று 5பேர் சாவு

யாழ்ப்பாணம், செப். 9
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்த 3 பேரும், பருத்தித்துறை 19 ➤

## வவுனியாவில் நேற்று 2பேர் சாவு

வவுனியா, செப். 9
வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இருவர் உயிரிழந்துள்ளனர். 19 ➤

## கொரோனாத் தொற்றால் மன்னாரில் இருவர் சாவு

மன்னார், செப். 9
மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் 19 ➤

ரூ. 2 ஆயிரம் கொடுப்பனவு

## யாழில் 9 ஆயிரம் பேருக்கு 'தண்ணி காட்டுகிறது' அரசு

யாழ்ப்பாணம், செப். 9
முடக்க காலத்தில் அரசு அறிவித்த 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்னமும் 9 ஆயிரம் பேருக்கு வழங்கப்படவில்லை. அரசு நிதி வழங் 19 ➤

## நேற்று சாவு 185 தொற்று 2,915

கொழும்பு, செப். 9
கொரோனாத் தொற்றால் மேலும் 185 பேர் சாவடைந்துள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதன்படி நாட்டில் பதிவான கொரோனாச் சாவுகளின் மொத்த எண்ணிக்கை 10 19 ➤

முடக்க காலத்தில் கோர விபத்து

## ஹன்ரரோடு மோதிய 'கப்' இருவர் பரிதாபச் சாவு!

*கனகராயன்குளத்தில் சம்பவம்*

வவுனியா, செப். 9
கப்ரக வாகனமும், ஹன்ரர் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் நேற்றுக் காலை 19 ➤



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகவிலையில் பொருள்களை விற்போர் மீது திடீர் பாய்ச்சல்

## நேற்றுவரை 45 வர்த்தகர்கள் மீது வழக்கு
## யாழ்.மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப். 9**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிக விலைக்குப் பொருள்களை விற்பனை செய்தல், காலாவதியான பொருள்களை விற்பனைசெய்தல் போன்ற குற்றச்சாட்டுகளில் கடந்த மூன்று வாரங்களில் நடத்தப்பட்ட சோதனைகளின் மூலமாக இதுவரை 45 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண மாவட்டச்செயலர் க.மகேசன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்றைய தினமும் 8 பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எனினும், நீதிமன்ற நடவடிக்கைகள் வரையறுக்கப்பட்டுள்ளமை காரணமாக வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படுவதில் தாமதம் நிலவுகின்றது.

தொடர்ச்சியாக பாவனையாளர் அதிகார சபையால் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனுடன் இணைந்த வகையிலே நிறுத்தல் மற்றும் அளவைகள் திணைக்களமும் இந்தச் சந்தர்ப்பத்தில் தங்களுடைய பணியாளர்களை பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துகின்றது.

மேலும் நடைபாதை வியாபார நிலையங்களையும் நடமாடும் வண்டிகளையும் பரிசோதனை செய்யவுள்ளார்கள். எனவே வியாபாரிகள் மிகவும் விழிப்புணர்வுடன் பொதுமக்களுக்கு நியாய விலையில் பொருள்களை விற்பனை செய்யவேண்டும். பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றமை கண்டறியப்பட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையுடன் இணைந்த வகையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் 5 பட்டதாரிப் பயிலுநர்களுடன் இணைந்து இந்தப் பரிசோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக சீனி, அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் தொடர்பான விற்பனை நிலை தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. நேற்றுத் தொடக்கம் மிகவும் இறுக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. - என்றார். (த-20)

# சபைக்குரிய வாகனமும் ஹைஏஸ்ஸும் விபத்து



யாழ்ப்பாணம், செப். 9

ஹைஏஸ் வாகனம் ஒன்றும் வலி.கிழக்கு (புத்தூர்) பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனமும் நேற்று மோதுண்டு விபத்துக்குள்ளாகின. எனினும், சாரதிகள் காயமின்றித் தப்பிக்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறை பிரதானவீதியின் யாழ்ப்பாணம் நாவலர் வீதிச்சந்தியில் இந்த விபத்து நேற்று இடம் பெற்றது.

சம்பவ இடத்துக்குச் சென்ற யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். (த-125)

# வத்திக்கானில் புனித பாப்பரசரை பிரதமர் மஹிந்த சந்திக்கமாட்டார்!

## வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு
## பேராயர் தரப்பின் அழுத்தமா?

கொழும்பு, செப். 9

இத்தாலிக்கு அடுத்த வாரம் பயணம் மேற்கொள்ளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச, அங்கு வத்திக்கானில் புனித பாப்பரசரைச் சந்திக்கமாட்டாரென வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

முன்னதாக, பிரதமர் மஹிந்த அங்கு பாப்பரசரைச் சந்திக்கவுள்ளார் என்று செய்திகள் வெளிவந்தபின்னர், கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்பட்டோர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் தொடர்பில் நீதியான விசாரணைகள் நடக்காமல் சர்வதேசத்துக்கு அரசு தவறான விடயங்களைக் கூறலாமென பேராயர் தெரிவித்திருந்தார். இந்தப் பின்னணியிலேயே பாப்பரசர் - மஹிந்த சந்திப்பு இடம் பெறாதென அறிவிக்கப்பட்டிருக்கிறது. கொழும்பு பேராயர் இல்லத்திலிருந்து வத்திக்கானுக்கு வழங்கப்பட்ட அழுத்தம் காரணமாக இந்தச் சந்திப்புத் தவிர்க்கப்பட்டிருக்கக்கூடுமென்று மற்றுமொரு தகவல் தெரிவித்தது. (த-இ)

# 40 கர்ப்பிணிகள் தொற்றால் சாவு

## இதுவரை 5,500 பேர் பாதிப்பு

கொழும்பு, செப். 9

கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி இதுவரை 40 கர்ப்பிணித் தாய்மார்கள் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரத்துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர். குடும்பநல சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர் சமுதாய மருத்துவர் சித்ரமாலி டி சில்வா இதனைத் தெரிவித்தார்.

இதுவரை 5ஆயிரத்து 500 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# சர்வதேசத்தை ஏமாற்ற இடமளிக்கமாட்டோம்

## பாப்பரசரை சந்திக்கும் பிரதமரின் திட்டத்துக்கு பேராயர் கடும் எதிர்ப்பு



கொழும்பு, செப். 9

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் உண்மையை வெளிப்படுத்தாமல் அதனை மூடிமறைப்பதற்காக அரசு மேற்கொள்ளும் வேலைத்திட்டத்தின் மற்றோர் அங்கமாகவே பரிசுத்த பாப்பரசரைச் சந்திப்பதற்கான முயற்சி இடம்பெறுகின்றது. இவ்வாறான நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இத்தாலிப் பயணத்தின் போது, பாப்பரசரைச் சந்தித்து, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பில் விளக்கமளிக்கப்படும் என அரச தரப்பில் நேற்றுமுன்தினம் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் தமது தரப்பின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும்நோக்கில் பேராயர் தலைமையில் நேற்று விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்று நடைபெற்றது. அதில் பேராயர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களால் எதிர்பார்க்கப்படும் நீதி இன்னும் வழங்கப்படவில்லை. மாறாக இது விடயத்தில் அரசுக்குச் சாதகமான வேலைத்திட்டத்தையே அரசதரப்பினர் மேற்கொள்கின்றனர்.

இந்த அரசு விசாரணைகளை மூடிமறைக்க முற்படுகின்றதேதவிர, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கான நகர்வு எதையும் காணமுடியவில்லை என சர்வதேசத்துக்கு நாம் தெரியப்படுத்தியுள்ளோம். எனவே, பொய்யுரைத்து வெளிநாட்டு மக்களை தவறாக வழிநடத்துவதற்கு அரசு மேற்கொள்ளும் நடவடிக்கையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நீதியை வழங்குவதற்கான அதிகாரம் அரசுக்கு இருக்கின்றது. 20 ஊடாக ஜனாதிபதிக்குப் பலம் உள்ளது. இந்தநிலையில் சர்வதேசத்தை நாடி அதன்மூலம் தப்பமுற்படுவது முதுகெலும்புள்ள தலைமைத்துவம் கிடையாது." - என்றார். (த-44)

# சிதைவடைந்த கை வெற்றிகரமாக பொருத்தப்பட்டது

## யாழ்.போதனாவில் சத்திரசிகிச்சை

கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தபோது தவறிவீழ்ந்து படகின் காற்றாடியில் சிக்கியவரின் கை சிதைவடைந்தநிலையில், யாழ். போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட சத்திரசிகிச்சை மூலமாக வெற்றிகரமாக பொருத்தப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவக் குழாமினர் குறித்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டனர்.

பருத்தித்துறைக் கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த மன்னாரைச் சேர்ந்த மீனவர் ஒருவரே நேற்றுமுன்தினம் தவறுதலாக கடலில் வீழ்ந்தபோது அவரின் வலது கை படகின் காற்றாடியில் சிக்கியதால் சிதைவடைந்திருந்தது.

அவர் உடனடியாக யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் 5 மணித்தியாலங்கள் சத்திரசிகிச்சையின் பின்னர் கை மீளப்பொருத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# நாட்டைத் திறப்பதாயின் முற்கூட்டியே கூறுங்கள்

## சுகாதாரத் தரப்பு வலியுறுத்து

கொழும்பு, செப். 9

எதிர்வரும் 13ஆம் திகதி நாட்டைத் திறப்பதாயின், திட்டங்களை முன்கூட்டியே உருவாக்கி, அதனைப் பகிரங்கப்படுத்துவது பொருத்தமானதென பிரதி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

13ஆம் திகதி தொடக்கம் திறப்பதாயின் அன்றைய தினம் சமூக, பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய முறை குறித்து, அந்தந்தப் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரிகள் திட்டமிட்டு அதனை பகிரங்கப்படுத்த வேண்டும்.

அவ்வாறு பகிரங்கப்படுத்தினால் நாட்டைத் திறப்பதற்கு தகுந்த சூழ்நிலை உள்ளதாக திருப்தியடையலாம். - என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதார விதிமுறைகளை மீறி திருமணம் ஏற்பாடு செய்தவர்கள் நீதிமன்றுக்கு!

### தம்பதியினருக்கு பி.சி.ஆர். சோதனை

யாழ்ப்பாணம், செப். 9
அச்சுவேலி வடக்கில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டன என்று குற்றம்சாட்டப்பட்டு, நிகழ்வை ஏற்பாடு செய்தவர்கள் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், செப். 9
அச்சுவேலி வடக்கில் இடம்பெற்ற திருமண நிகழ்வில் சுகாதார நடைமுறைகள் மீறப்பட்டன என்று குற்றம் சாட்டப்பட்டு, நிகழ்வை ஏற்பாடுசெய்தவர்கள் மீது பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். திருமணத் தம்பதியினருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
அச்சுவேலி வடக்கில் திருமண நிகழ்வு ஒன்று நேற்று நடைபெற்றது. நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கூடியுள்ளனர் என்று தகவல் கிடைத்தது. நிகழ்வு நடைபெறும் இடத்துக்குச் சென்ற பொலிஸார், திருமண நிகழ்வில் பங்கேற்றிருந்த விருந்தினர்களை அங்கிருந்து அனுப்பிவிட்டு மணமகன், மணமகள் மற்றும் அவர்களுடன் நெருக்கமான உறவினர்களுக்கும் கொரோனாத்தொற்று பரிசோதனை மேற்கொள்ள சுகாதார மருத்துவ அதிகாரியிடம் அனுமதி கோரினர். அத்துடன், சுகாதாரக் கட்டுப்பாடுகளை மீறி திருமண நிகழ்வை ஒழுங்குசெய்தவர்கள் மீது மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவர்களை எதிர்வரும் 15ஆம் திகதி நீதிமன்றில் முற்படுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அச்சுவேலி பொலிஸார் கூறினர். (த-26)

## கொரோனாத் தடுப்புக் குழுவிலிருந்து மற்றொரு மருத்துவரும் விலகினார்



கொழும்பு, செப். 9
கொரோனாத்தடுப்பு தொழில்நுட்ப குழுவிலிருந்து மற்றுமொரு விசேட மருத்துவரான அசோக குணரத்ன பதவி விலகியுள்ளார்.
தொடர்ந்தும் குறித்த குழுவில் அங்கம் வகிப்பது பயனற்றது என எண்ணி குறித்த பதவியிலிருந்து விலகும் கடிதத்தை கையளித்தேன் என்று அவர் தெரிவித்துள்ளார். முன்னதாக குறித்த குழுவிலிருந்து பேராசிரியர் நீலிகா மலவிகே மற்றும் விசேட மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம ஆகியோர் விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

## கொரோனாவைக் காட்டி பிணை கோரவே முடியாது

### மேன்முறையீட்டு நீதிமன்றம் சுட்டிக்காட்டு



கொழும்பு, செப். 9
சந்தேகநபர்களுக்காக பிணைக்கோரிக்கையை சமர்ப்பிக்கும்போது கொரோனாத்தொற்று நிலைமையை விசேட காரணமாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று மேன்முறையீட்டுநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் ஒருவருக்காக சமர்ப்பிக்கப்பட்ட சீராக்கல் மனு ஒன்றை நிராகரித்த மேன் முறையீட்டு நீதி மன்ற நீதிபதிகள் குழாம், இந்த உத்தரவைப் பிறப்பித்தது என்று தெரிவிக்கப்பட்டது.
கொரோனாத் தொற்று நிலைமை அனைத்துக் கைதிகளுக்கும் பொதுவானது என சுட்டிக்காட்டிய நீதிபதிகள் குழாம் அதனை விசேட காரணமாகக் கருதமுடியாது என்று தீர்ப்பளித்துள்ளது. (த-இ)

## தாயும் மகளும் தொற்றால் சாவு

கொழும்பு, செப். 9
புத்தளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேப்பமடு பகுதியில் ஒரே வீட்டில் வசித்துவந்த தாயும் மகளும் கொரோனாத் தொற்றுக் காரணமாக நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர்.
புத்தளம் மன்னார் வீதி, வேப்பமடு பகுதியில் வசித்துவந்த 51 மற்றும் 37 வயதுடையவர்களே உயிரிழந்தனர்.
குறித்த குடும்பத்தின் தலைவரான 51 வயதுடைய நபர் கடந்த 4ஆம் திகதி உயிரிழந்துள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## தாயின் இறப்பைத் தாங்காது உயிர்மாய்த்தார் மகன்

### வெள்ளவத்தையில் சம்பவம்

கொழும்பு, செப். 9
தாயாரின் உயிரிழப்புச் செய்தியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் அவருடைய மகன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.
வெள்ளவத்தை - மகேஸ்வரி வீதி பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்று வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.
பொறியியல் துறையில் கல்விகற்கும் 26 வயதான நபரே தூக்கிட்டு உயிர்மாய்த்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.
அவருடைய தாயார், மாரடைப்புக் காரணமாக களுபோவில மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். எனினும், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.
இந்தநிலையில், குறித்த தகவலை மூத்தசகோதரன், வீட்டிலிருந்த தனது இளைய சகோதரனுக்கு அலைபேசி மூலம் தெரியப்படுத்தியுள்ளார். இதனால் மனமுடைந்த இளைய சகோதரன், தவறான முடிவெடுத்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-இ)

## எனக்கு அழுத்தம் ஏதுமில்லை பிறருக்கு உள்ளதா தெரியாது

### பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

கொழும்பு, செப். 9
"பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் என்ற ரீதியில் எனக்கு எவ்வித அழுத்தங்களும் பிரயோகிக்கப்படவில்லை. ஆனால் ஏனையோருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகிறதா என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது" என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.
சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், சுகாதாரத் தரப்பினராக நாம் எமது கடமையை நிறைவேற்றுவதைப் போலவே, ஏனையோர் அவரவர் கடமையை சரியாக நிறைவேற்ற வேண்டும். - என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

# அவசரகாலச் சட்டத்தின் மூலமாக ஆர்ப்பாட்டங்களை அடக்கோம்

### கூறுகின்றார் பெரமுன எம்.பி. ஜகத் குமார

கொழும்பு, செப். 9
"கத்தியால் பாண் வெட்ட முடியும்; அதேபோல் கழுத்தையும் வெட்ட முடியும். அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த முடியும். ஆனால், அதனைச் செய்யமாட்டோம்" என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
"நுகர்வோர் விவகார சட்டங்களிலுள்ள குறிப்பாகத் தண்டப்பணம் உள்ளிட்ட விடயங்களைத் திருத்தங்களுக்கு உள்ளடக்கியிருக்கின்றோம். அதற்கான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. எனினும், சில கறுப்பு வர்த்தகர்கள் செய்கின்ற நடவடிக்கைக்கு எதிராகத் தீர்மானங்கள் அவசியம். மக்களுக்கு நிவாரணமளிக்கையில் சட்டவிரோதமாகச் செயற்படுகின்ற வர்த்தகர்கள், அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவே இந்த அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். இந்தச் சட்டமானது தற்காலிகமானது.
அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடு, டொலர் பிரச்சினை என்பவை மிக விரைவில் தீர்க்கப்பட்டு அவசரகாலச் சட்டமும் முடிவுக்குக் கொண்டுவரப்படும்" - என்றார். (த-22)

## 4,200 ஒக்சிமீற்றர்களை கடத்தி வந்த நபர் கைது

கொழும்பு, செப். 9
சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகை ஒக்சிமீற்றர்கள் சுங்கப்பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.
21 பெட்டிகளில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 4ஆயித்து 200 ஒக்சிமீற்றர்கள் கைப்பற்றப்பட்டன. அவற்றின் பெறுமதி 23 லட்சத்து 44 ஆயிரத்து 642 ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.
சந்தேகநபர் ஒருவர் ஸ்ரீலங்கன் கார்கோ நிறுவன அதிகாரிகளிடம் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து குறித்த ஒக்சிமீற்றர்களை விடுவித்துள்ளமை தெரியவந்துள்ளது.
சந்தேகநபர் நீர்கொழும்பு நீதிவானிடம் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 21 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இந்த விடயம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (த-இ)

## கசிப்புக் காய்ச்சிய பெண் கைது

யாழ்ப்பாணம், செப். 9
வீட்டில் கசிப்புக் காய்ச்சினார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணொருவர் யாழ்ப்பாண பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
35 வயதுடைய அந்தப் பெண், கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீட்டுக்குள் வைத்து கசிப்புக் காய்ச்சினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அந்த வீட்டிலிருந்து 2 லீற்றர் கசிப்பும் 5 லீற்றர் கோடாவும் கைப்பற்றப்பட்டன. சட்டநடவடிக்கைக்காக அவர், கோப்பாய் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். (த-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொரோனா ஆபத்தைத் தடுக்க தடுப்பூசி பெறுவது கட்டாயம்!

## தொற்றுநோயியல் நிபுணர் ஆலோசனை

**யாழ்ப்பாணம், செப். 9**

**கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் ஓரளவுக்கேனும் வெற்றியளித்தால் மட்டுமே தொற்றால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தடுக்கமுடியும் என்று வடக்கு மாகாண தொற்றுநோயியல் நிபுணர் சிவகணேஸ் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் இருந்தபோதும், கடந்த இரண்டு மாதங்களில் நோய்த்தாக்கம் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. நோயாளர்கள் அதிகரித்துள்ளதுடன், இறப்புக்களும் அதிகரித்துள்ளன.

பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளபோதும், பொதுமக்களின் சில நடவடிக்கைகள் காரணமாகத் தடுப்பு நடவடிக்கைகளின் இயலுமை குறைவாக உள்ளது. அதனால் எதிர்பார்த்ததை விட இறப்புக்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

60 வயதுக்கு மேற்பட்டவர்களும், பல்வேறு தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுமே அதிகளவில் இறப்புக்களைச் சந்தித்துள்ளனர். இவர்கள் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாமையே காரணம். உலகளாவிய ரீதியில் ஆரம்பகால கட்டங்களில் 70 வீதமான மக்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் பொழுது பாதுகாப்பு அதிகம் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தற்பொழுது புதிய டெல்டா திரிபுகள் பரவுவதால், எதிர்பார்க்கும் அடைவு மட்டம் அதிகமாகக் காணப்பட வேண்டும்.

குறிப்பாக தடுப்பூசி அடைவு மட்டத்தை எட்டினால், இறப்புக்களைக் குறைக்கக்கூடியதாக இருக்கும். அதேவேளை ஆரோக்கியமான உணவுகளை நாம் உட்கொள்ள வேண்டும். மீன், முட்டை, கடலை வகைகள், பயறு, அவரை வகை உணவுகள், அதேபோன்று மருந்து தெளிக்கப்படாத கீரை வகைகள், பல்வேறு வகையான பழங்களை அதிகம் உண்ணவேண்டும்.

போதிய அளவு நீர்ஆகாரமும் உட்கொள்ள வேண்டும். சோடா தவிர்ந்த ஏனைய நீர் ஆகாரங்களை உட்கொள்வதன் ஊடாக தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்கலாம்.

அத்துடன் தனியாள் இடைவெளியைப் பேணுதல், முகக்கவசம் அணிதல் மற்றும் கைகளை அடிக்கடி கழுவுதல் மூலமும் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். -என்றார். (ம-4,6)



பாம்பு வடிவிலான தேங்காய் ஒன்று கிளிநொச்சி பளைப் பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளது. (ம-4,6)

# சாவகச்சேரி நகரில் கூ.சங்கம் இல்லை

## மக்கள் சிரமம்

சாவகச்சேரி, செப். 9

சாவகச்சேரி நகரப்பகுதியில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் இல்லாத காரணத்தால், மக்கள் நிர்ணய விலையில் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது கிளை, சாவகச்சேரி டச்சு வீதியில் நீண்டகாலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. அந்தக் கட்டடத்தை மீள வழங்குமாறு அதன் உரிமையாளர் கோரியதையடுத்து, கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் கட்டடம் உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

அதன்பின்னர் நகரப்பகுதியில் வாடகைக்கு கட்டடம் பெறுவதில் ஏற்பட்ட சிரமங்களால் கிளைக்கடை இன்னமும் திறக்கப்படவில்லை. தற்போது சங்கக் கிளைகளில் நிர்ணய விலையில் பொருள்களை வாங்க முடியாமல் நகரப்பகுதி மக்கள் தனியார் கடைகளை நாடவேண்டியுள்ளது. (ம-4,9)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா,செப்.9

கேரளக் கஞ்சாவை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில், சந்தேகநபர் ஒருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பூந்தோட்டம் சந்தியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், அந்த வீதியூடாகப் பயணித்த முச்சக்கர வண்டியை மறித்து சோதனை மேற்கொண்டனர்.

குறித்த முச்சக்கரவண்டியில் கேரளக் கஞ்சா கொண்டு செல்லப்பட்டுள்ளமை தெரியவந்தது. அதனையடுத்து சந்தேகநபரை நபரை பொலிஸார் கைது செய்தனர்.

அவர் பயணித்த முச்சக்கர வண்டியும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (ம4,110)



# காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேசம் விரைவில் நீதிவழங்கும்

## உறவுகள் நம்பிக்கை

கிளிநொச்சி, செப். 9

இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இந்த வருடத்தில் சர்வதேசம் நீதியைப் பெற்றுத்தரும் என்று வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் சங்கத்தின் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவிக்கையில்,

கடந்த 11 வருடங்களுக்கு மேலாக வடக்கு மற்றும் கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டங்களில் ஈடுபட்டுவருகின்றனர். ஜெனீவாவின் 36ஆவது கூட்டத்தொடரில் இருந்து சர்வதேசத்திடம் நாங்கள் நீதியை எதிர்பார்த்துள்ளோம். இந்த வருட கூட்டத் தொடரிலேனும் எமக்குத் தீர்வைப் பெற்றுத்தர சர்வதேசம் முன்வரும் என்று நம்புகின்றோம். தற்போது ஆட்சியில் உள்ள அரசும் எமக்குத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும். எமக்கு நீதி கிடைக்கும் வரை எமது போராட்டங்களை கைவிடப் போவதில்லை. என்றார். (ம-4,6)


# கலாசாலைகளின் பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு,செப்.9

ஆசிரியர் கலாசாலைகளின் இறுதி ஆண்டுப் பரீட்சை, காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பீ பூஜித தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் கொரோனாத் தொற்றைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இறுதி ஆண்டுப் பரீட்சையை எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 26 ஆம் திகதி வரை நடத்துவதற்கு ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)



# கிளிநொச்சியில் மின்தகன மயானம்

கிளிநொச்சி, செப். 9

கிளிநொச்சியில் மின்தகன மயானத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கரைச்சி பிரதேச தவிசாளர் வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

குறித்த மயானத்தை அமைக்க 24 மில்லியன் ரூபா நிதி தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒரு கோடி ரூபா நிதியுதவியை, கிளிநொச்சியில் உள்ள வர்த்தகர் ஒருவர் வழங்க முன்வந்துள்ளார்.

அத்துடன் புலம்பெயர் அமைப்பு ஒன்றும் ஒரு கோடி ரூபா நிதியை வழங்க முன்வந்துள்ளது. அதற்கமைவாக மின்தகன மயானம் அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## எரிகின்ற வீட்டில் பிடுங்கியது லாபம்!

நாடளாவிய ரீதியில் அண்மைக்காலமாக பல தொன் உணவுப் பொருள்கள், குறிப்பாக சீனி மற்றும் நெல் என்பன பதுக்கல் பேர்வழிகளிடம் இருந்து கைப்பற்றப் பட்டுவருகின்றன. தேசிய அளவில் ஏற்பட்ட பெரும் தட்டுப்பாட்டை அடுத்து மேற்கொள்ளப்பட்ட பல் வேறு தேடுதல் நடவடிக்கைகளிலேயே மேற்படி பொருள்கள் தொன் கணக்கில் மீட்கப்படுகின்றன. ஆகப்பிந்தியதாக கந்தளாயில் நேற்றுமுன்தினம் 45 ஆயிரம் தொன் நெல் மீட்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக தேசியப் பொருளாதாரமும் தனிநபர் பொருளாதாரமும் அதல பாதாளத்தில் வீழ்ந்துகிடக்கின்றமை யாவரும் அறிந்ததே. சீனிக்கு நாடளாவிய ரீதியில் செயற்கைத் தட்டுப்பாடொன்று ஏற்படுத்தப்பட்டது. சீனியின் விலை 220 ரூபா வரை எகிறியது. மக்கள் பெரும் நெருக்கடிக்குத் தள்ளப்பட்டனர். சீனிக்கு ஏற்படப்போகும் கிராக்கியை ஊகித்துக்கொண்டு களஞ்சிய சாலைகளின் உரிமையாளர்கள் தொன் கணக்கில் சீனியைப் பதுக்கியமைதான் இந்த நிலை ஏற்பட முக்கிய காரணமாக அமைந்தது.

எங்கெல்லாம் சீனி குறைந்த விலையில் கிடைத்ததோ அங்கெல்லாம் மக்கள் வரிசையாக நின்றனர். 'சீனிக் கொத்தணி' ஒன்று உருவாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவிக்கும் அளவுக்கு நிலைமை மோசமானது. ஆக, பொருண்மியம் நலிந்த நிலையில் இருந்த மக்களுக்கு அரசு கொடுத்ததை விட பதுக்கல் பேர்வழிகள் கொடுத்த அடி பெரும் சம்மட்டி அடியாக விழுந்தது. பின்னர் பதுக்கப்பட்ட சீனியை கண்டுபிடித்து வெளிக்கொண்டுவந்ததும் நாட்டில் நிலவிய இந்தத் தட்டுப்பாடு வெகுவாகக் குறைந்தது.

பதுக்கப்பட்ட சீனியைக் கண்டுபிடித்து அவற்றைப் பொதுமையான பயன்பாட்டுக்காகக் கொண்டுவந்தமைக்கு சார்ந்தோருக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்தே ஆகவேண்டும். ஆனால், இந்தத் திட்டத்தை, பொறிமுறையை ஏன் அவர்களால் முன்கூட்டியே நடைமுறைப்படுத்த முடியாமல் போனது?. திட்டமொன்றை நடைமுறைப்படுத்துகின்றபோது அதன் சாதக, பாதகங்களையும் அந்தத் திட்டத்தால் வரக்கூடிய எதிர்வினைகளையும் அறிந்திருப்பது அரசின் கடமையல்லவா?. அரசின் முறையற்ற வியூகங்களும், பொறிமுறைகளும்தான் பதுக்கல்காரர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தன. இன்றும் கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

தற்போதும்கூட பதுக்கப்பட்ட அத்தனை உணவுப் பொருள்களும் வெளிக்கொண்டுவரப்பட்டன என்று அறுதியாகச் சொல்வதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. கண்டுபிடிக்கப்பட்டதை விடவும் பலமடங்கு பொருள்கள் தற்போதும்கூட சட்டவிரோதமாக களஞ்சிய சாலைகளுக்குள் உறங்கிக் கொண்டிருக்கலாம். செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி பொருண்மியம் நலிந்தவனை மேலும் இரையாக்கி தன் கல்லாவை நிரப்பிக்கொள்வதற்காக பண முதலைகள் காத்துக்கிடக்கின்றனதான். கொரோனாவைக் கட்டுப்படுத்துவதில் பல தவறுகளைச் செய்து கோட்டைவிட்ட அரசு, இந்த விடயத்திலாவது கூடுதல் வினைத்திறனுடன் நடந்துகொள்ள வேண்டும். சட்டவிரோதப் பதுக்கல் பொருள்கள் அனைத்தும் வெளியில் வரவேண்டும். கொரோனாவால் பொருண்மியம் நலிந்த நிலையில் உள்ள மக்களை பதுக்கல்களால் மேலும் வதைப்பதென்பதும்கூட ஆசியாவின் அதியம்தான்.




# 20 வயதுக்கு மேற்பட்டோருக்கு ஆறு வாரங்களுக்குள் தடுப்பூசி




**கொழும்பு, செப். 9**
**20 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் எதிர்வரும் ஆறு வாரங்களுக்குள் தடுப்பூசி வழங்கப்படும் என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.**

நாடாளுமன்றில், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டாரவால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்:
நாட்டில் பல கிராம அலுவலர் பிரிவுகளுக்கு தடுப்பூசிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்கிறோம். சைனோபார்ம் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அதனைப் பெற்றுக்கொடுப்பதில் சில தாமதங்கள் ஏற்பட்டன.
சீனாவில் தொற்றாளர்கள் அதிகரித்திருந்தமையால் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே, இந்த மாவட்டங்களுக்குத் தடுப்பூசிகளை வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. எனினும் கடந்த சில நாள்களுக்கு முன்னர் 4 மில்லியன் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றன. எனவே தடுப்பூசி வழங்கும் பணிகள் மீண்டும் தாமதமின்றி முன்னெடுக்கப்படுகின்றன.
எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்குள் தடுப்பூசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணி நிறைவுற்றிருக்கும். எதிர்வரும் ஆறு வாரங்களுக்குள் 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தடுப்பூசி வழங்கும் பணியை இறுதி செய்வதே அரசின் அடுத்த இலக்காகும்.
இளையோருக்கு வழங்கப்படும் தடுப்பூசிகளின் வகைகள் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை. அத்துடன் வெளிநாடு செல்பவர்களுக்குப் பைஸர் தடுப்பூசியை வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-4)

# பேராபத்தை விளைவிக்கும் வைரஸூம் இலங்கைக்குள்!

## விசேட நிபுணர் தெரிவிப்பு

கொழும்பு, செப். 9
தென்னாபிரிக்கா உள்ளிட்ட சில நாடுகளில் பரவிவரும் சீ1.2 என்று அழைக்கப்படும் மிக வீரியம் கொண்ட வைரஸ் இலங்கைக்குள் பரவும் அபாயம் உள்ளது என்று வைரஸ் தொடர்பான விசேட நிபுணரும், நாடாளுமன்ற உறுப்பினரும் பேராசிரியருமான திஸ்ஸ விதாரணை தெரிவித்துள்ளார்.
தென்னாபிரிக்கா, தென்னமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ள இந்த வைரஸ், தற்போது ஏனைய சில நாடுகளிலும் அடையாளம் காணப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
சீனாவில் கொரோனா தோற்றம் பெற்றாலும் உலகின் பல நாடுகளிலும் அந்த வைரஸ் பல்வேறு வகையான திரிபுகளை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி இந்தியாவில் முதன்முதல் அறியப்பட்ட டெல்டா வைரஸே ஆபத்தானதாகக் கருதப்பட்ட நிலையில், பின்னர்




டெல்டா பிளஸ் எனும் திரிபு ஆபத்தானதாக அடையாளப்படுத்தப்பட்டது. தற்போது தென்னாபிரிக்கத் திரிபு பேராபத்து மிக்கதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்ப்பை சமாளிப்பதற்கே அவசரகாலச் சட்டம் அமுல்

## கஜேந்திரன் எம்.பி. எதிர்ப்பு



**கொழும்பு, செப். 9**

**'அன்று தமிழரின் போராட்டங்களை ஒடுக்குவதற்காகக் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தை இப்போது சிங்களவர்களின் போராட்டத்தை ஒடுக்குவதற்காகக் கொண்டுவரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.'**

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவைச் சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமூலம், உற்பத்தி வரிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

'எந்தத் தேவையும் இன்றி அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சிங்கள பௌத்த பேரினவாத காலனித்துவ ஆதிக்க ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஜனநாயக ரீதியிலும், ஆயுத ரீதியிலும் போராடும்போது அதனை ஒடுக்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டம் 30 ஆண்டுகளாகத் தமிழர்களை வேட்டையாடியது.

எங்களின் பெண்களை சித்திரவதை செய்வதற்கும், எங்களின் இளைஞர்களை கேட்பாரின்றிக் கொலை செய்வதற்கும் எங்களது தேசத்தின் செல்வங்களை கொள்ளையடித்து தென்னிலங்கைக்கு கொண்டு வரவும் அந்த அவசரகால சட்டத்தைக் கொண்டு வந்தீர்கள். ஆனால் இன்று சிங்கள மக்களிடமிருந்து வரும் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக இந்த அவசரகாலச் சட்டத்தை கொண்டு வந்துள்ளீர்கள். இந்தப் போக்கு உங்களை அதல பாதாளத்திற்கு கொண்டு செல்லும்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் குளத்திற்குக் கீழ் 178 ஏக்கரில் விவசாயக் காணி 72 ஆம் ஆண்டு முதல் உறுதிகள் வழங்கப்பட்டு விவசாயிகளினால் விவசாய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அந்த விவசாய நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துமாறு பௌத்த பிக்கு ஒருவரால் ஜனாதிபதி செயலகத்துக்கும், முல்லைத்தீவு வன இலாகாவுக்கும் அழுத்தம் கொடுக்கப்படுகின்றது.

அதேபோன்று மயிலத்தமடுவில் இந்த வருடம், ஓகஸ்ட் மாதத்தில் இருந்து சிங்கள மக்கள் வெளியேறுவார்கள் என்று அறிவித்தல் ஒட்டப்பட்டிருந்தது. அமைச்சர் பஸில் ராஜபக்சவும் அவர்கள் விலகி விடுவார்கள் என்று தெரிவித்திருந்தார். ஆனால் அங்கு மக்களின் மாடு வளர்ப்பு நடவடிக்கைகளைத் தடுக்கும் வகையில், மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் அந்தக் காரியத்தை செய்கின்றனர்.

ஆகவே அதை உடனடியாக நிறுத்த வேண்டும். இவ்வாறு செயற்படும் மகாவலி அதிகார சபைக்கு எப்படி உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன உதவிகளை வழங்குகின்றன என்ற கேள்விகளை எழுப்புகின்றேன்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் அரசியல் பழிவாங்கல் தொடர்கின்றது. அங்கு வீட்டுத்திட்டத்தின் கீழ் வீடுகளை வழங்கும் போது புள்ளித்திட்டத்தை வழங்கி அதில் முன்னுரிமை அடிப்படையில் வீடுகளை வழங்க வேண்டும் என்பதே நடைமுறையாகும். இதன்படி செயற்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இராஜாங்க அமைச்சரினால் அது தொடர்பான கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டச் செயலரும் அவரின் மேல் முறையீடு தொடர்பில் ஆராயாது அந்த உத்தியோகத்தரின் இடமாற்றத்திற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார். அந்த உத்தியோகத்தர் முறையாக நடந்துகொண்டபோதும் அவரைப் பழிவாங்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலும், வட மாகாணத்திலும் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. இறந்தவர்களின் உடல்கள் வைத்தியசாலைகளில் தேங்குகின்றன. யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலுமே அதனைத் தகனம் செய்ய முடியும்.

வட மாகாணத்துக்கு இரண்டு தகனசாலைகளே உள்ளன. இதனால் அநுராதபுரத்துக்கும் பொலனறுவைக்கும் இந்த உடல்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. இது உறவினர்களுக்கு விருப்பமில்லை. இதனால் உடனடியாக இந்த உடல்களை அந்த மாவட்டங்களிலேயே எரிப்பதற்கான தகனசாலைகளை அமைக்க வேண்டும். அல்லது விறகுகளைப் போட்டு அவற்றை எரிப்பதற்காவது நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்' -என்றார். (ம-22)

# மதுரை - இலங்கைக்கான விமான சேவை ஆரம்பம்!

கொழும்பு, செப். 9

கொரோனாத் தொற்றால் இடைநிறுத்தப்பட்ட மதுரை-இலங்கைக்கு இடையிலான விமான சேவை ஒன்றரை வருடத்துக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றால் கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் விமானப் போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் சில தளர்வுகளுடன் விமானப்போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக சிறிலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் மூலம் 38 பயணிகள் இலங்கையிலிருந்து மதுரை விமான நிலையத்துக்குச் சென்றுள்ளனர். அவர்கள் விமான நிலையத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதேவேளை மதுரையில் இருந்து இலங்கைக்குப் புறப்பட்ட விமானத்தில் 76 பயணிகள் பயணித்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# பொலிஸ் பரிசோதகரை கட்டிவைத்த மக்கள்

கொழும்பு, செப். 9

கிராமத்துக்குள் திருட்டுத்தனமாக நுழைந்த, உப பொலிஸ் பரிசோதகர் ஒருவரை, கிராம மக்கள் மடக்கிப் பிடித்துக் கட்டிவைத்தனர்.

இந்தச் சம்பவம் சிலாபம் அம்பகந்தவில என்ற மீனவக் கிராமத்தில் நடந்துள்ளது.

அங்குள்ள மீன்பிடிப் படகில் தொழில் புரிகின்ற மீனவர் ஒருவரது இளவயது மனைவியுடன், குறித்த நபர் தகாத தொடர்பு வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து பெண்ணின் வீட்டுக்கு அவர் இரவு வேளை சென்றபோது, கிராம மக்கள் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கட்டி வைத்துள்ளனர். குறித்த பொலிஸ் அதிகாரி திருமணமாகாதவர். கிராம மக்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கமைவாக, அவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். (ம-4)

# மக்களுக்கு அரசு அநீதி இழைப்பு ஆட்சி கவிழும் காலம் விரைவில்!

## அடித்துக் கூறுகின்றார் சஜித்

கொழும்பு, செப். 9

'அரசு சமூக நீதியை மீறிச் செயற்படுகின்றது. மக்களுக்கு இந்த அரசு அநீதியே இழைக்கின்றது. இதனால் அரசு கவிழும் காலம் வெகு தொலைவில் இல்லை இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நாட்டின் தற்போதைய நிதி நெருக்கடியைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, கறுப்புப் பணத்தைச் சுத்தம் செய்வதில் அரசு ஈடுபட்டுள்ளது. அதன்மூலம் மோசடி செய்பவர்கள் தங்கள் கறுப்புப் பணத்தைப் பரிமாற்றம் செய்ய முடியும்.

யாராவது வரி செலுத்தாமல் பதுக்கி வைத்திருந்தால், அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். அவற்றுக்குப் போதுமான ஏற்பாடுகள் உள்ளன. அதற்குப் பதிலாக, மோசடி செய்பவர்கள் மற்றும் சில பணக்கார குபேரர்களுக்கு அரசு வரிச்சலுகைகளை வழங்க முயற்சிக்கின்றது. நாட்டில் முதலாளித்துவத்தை அனுமதிப்பதன் மூலம் அரசு சமூக நீதியை மீற முயற்சிக்கின்றது.

இதன் ஊடாக சொத்துக் குவிப்பில் ஈடுபடுவோர், வரி செலுத்தாது மோசடி செய்பவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நடவடிக்கையே இடம்பெறுகின்றது. ஆகவே, அரசின் இந்த நடவடிக்கையைக் கடுமையாக எதிர்க்கின்றோம்' -என்றார். (ம-22)

# மக்களை அடக்கும் நோக்கம் பெரமுன அரசுக்கு கிடையாது

## டிலான் தெரிவிப்பு

சிறிலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசு அடக்குமுறையான ஆட்சியை முன்னெடுக்கவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களை அடக்குமுறை செய்வதற்காக அவசரகாலச் சட்டம் கொண்டுவரப்படவில்லை. ஆனால் எதிர்க்கட்சியினர் கறுப்புச் சந்தையிலுள்ள முதலாளிகளுக்கு விசுவாசமாகவே நடக்கின்றனர். மக்களின் பக்கமாக அரசு உள்ளது. நாடாளுமன்றில் பிரேமதாஸவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை அன்று கொண்டுவரப்பட்டது. விவாத நாள்களில் நாடாளுமன்ற ஆசனங்களில் பன்றியின் எண்ணெய் விடப்பட்டது. மலையாள ஜோதிட ஆலோசனைப்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. உலங்கு வானூர்தியில் வெட்டப்பட்ட தேசிக்காய்கள் நாடு முழுதும் கொட்டப்பட்டன. நாடாளுமன்றத்தில் மலையாள மாந்திரிகர்கள் வந்து மந்திரங்களை ஓதினார்கள்.

இவ்வாறு சஜித்தின் தந்தையாரது ஆட்சிக்காலத்தில் ஜனநாயக விரோத நடவடிக்கை இடம்பெற்றது. -என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# மாலைதீவின் புதிய தீவுக்கு இலங்கையிலிருந்து மணல்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு



**கொழும்பு, செப். 9**

**மாலைதீவில் மற்றுமொரு தீவை உருவாக்குவதற்காக, இலங்கையின் கிழக்கு மாகாணத்திலிருந்து பெருமளவு மணல் ஏற்றுமதி செய்யப்பட்டுவருகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இந்தக் கடத்தல் செயற்பாட்டில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர் ஒருவரும், சிறிலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர் ஒருவரும் தொடர்புபட்டுள்ளனர். அத்துடன் கிழக்கு மாகாண ஆளுநரான அநுராதா யஹம்பத்தும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றார் என்றும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான கடத்தல் செயற்பாடுகளால் இலங்கைக்குக் கிடைக்கவிருந்த பெருமளவு அமெரிக்க டொலர் வருமானம் இல்லாமல் போயுள்ளது. அரச தரப்பினரே சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் கவனத்துக்குக் கொண்டு சென்றார்.

சாணக்கியனைத் தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவான ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இது சம்பந்தமாக பதிலளிக்க அவகாசத்தைக் கோரினார். (ம-4)

# இலங்கையில் நிலஅதிர்வில்லை

கொழும்பு, செப். 9

ஹம்பாந்தோட்டை லுணு கம்வெஹெர நீர்த்தேகத்துக்கு அருகில் உணரப்பட்ட நிலஅதிர்வானது, இலங்கையின் நிலப்பரப்புக்குள் ஏற்பட்டதல்ல என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் தொடர்பான சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த நிலஅதிர்வானது [illegible] தீவுப் பகுதியிலேயே ஏற்பட்டுள்ளது. உலக நாடுகளில் ஏற்பட்ட நிலஅதிர்வுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கைக்குள் எந்தவொரு நிலஅதிர்வும் ஏற்பட்டிருக்கவில்லை என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-4)

### அரசிலிருந்து வெளியேறி

# மாற்றுக் கூட்டணியை உருவாக்குகிறதா சு.க.?

## சாந்த பண்டார பதில்



கொழும்பு, செப். 9

'அரசிலிருந்து வெளியேறி, மாற்று அரசியல் கூட்டணியை அமைக்கும் தீர்மானத்தை கட்சியின் மத்தியசெயற்குழு எடுக்கவில்லை' என்று சுதந்திரக் கட்சியின் பிரசார செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சாந்த பண்டார தெரிவித்தார்.

சுதந்திரக்கட்சி தலைமையில் மாற்று அரசியல் கூட்டணியொன்றை உருவாக்க வேண்டும் என கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது என வெளியாகியுள்ள தகவல்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'பலரும், பலவிதமான கருத்துகளை முன்வைத்திருந்தாலும் கட்சியின் மத்திய செயற்குழுவில் அவ்வாறானதொரு முடிவு எடுக்கப்பட்வில்லை. கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் ஒருவரால் வெளியிடப்பட்டதாக கூறப்படும் தகவலானது அவரின் தனிப்பட்ட கருத்தாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு ஆதரவளித்தோம். எனவே, அவருக்கான ஆதரவு தொடரும். அதேபோல கட்சியைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கையும் கீழ்மட்டத்தில் இருந்து முன்னெடுக்கப்படும். அரசிலிருந்து வெளியேறும் எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை.'- என்றார். (ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு இன்றி நெருக்கடியை சமாளிக்க முடியாது!

*அமைச்சர் பஸில் தெரிவிப்பு*



**கொழும்பு, செப். 9**

**'கட்டுப்படுத்த முடியாத செலவுகள்; குறைந்துபோன வருமானம். இதுதான் இன்று நாடு எதிர்கொள்ளும் மிகப் பெரும் நெருக்கடி. இந்த நெருக்கடியை எம்மால் தனியாக எதிர்கொள்ள முடியாது. எனவே, எதிர்க்கட்சிகள் எமக்கு ஒத்துழைக்கவேண்டும் - இவ்வாறு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச சபையில் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவைச் சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமூலம், உற்பத்தி வரிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளை முன்வைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகால பொருளாதார வேலைத் திட்டங்கள் மற்றும் கொரோனா காரணமாக இந்த ஆண்டில் மாத்திரம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா முதல் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபா வரை குறைவாகவே வருமானம் கிடைத்துள்ளது. முழு உலகமும் எதிர்கொண்டுள்ள கொரோனாப் பெருந்தொற்றால் எமது பொருளாதாரமும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. அந்நியச் செலாவணி தொடர்பில் பெரும் நெருக்கடிக்கும் எமது நாடு முகங்கொடுத்துள்ளது. அதேபோன்று தேசிய ரீதியிலான நிதி நெருக்கடிகளுக்கும் திறைசேரி முகங்கொடுத்துள்ளது. இந்த மூன்று காரணிகளே தற்போது நாடு எதிர்கொண்டுள்ள பிரதான நெருக்கடிகளாகும். அதற்கான தீர்வைத் தேட முழுஅரசும் ஒத்துழைப்புடன் செயற்படுவதுடன், எதிர்க்கட்சிகளும் பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும்' - என்றார். (ம-22)



# ஊடகங்கள் மீது நீலிகா பாய்ச்சல்

கொழும்பு, செப். 9

முழுமையான தகவல்களை செவிசாய்க்காமல் ஊடகங்களில் வெளியிடப்படும் செய்திகள் தொடர்பில், சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் தொற்று நோய் எதிர்ப்புப் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் பேராசிரியர் நீலிகா மலவிகே கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் மற்றும் அதனால் பாடசாலைக் கல்வியில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பிலான இணையவழிக் கலந்துரையாடல் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. அதில் பேராசிரியர் நீலிகா மலவிகே கலந்துகொண்டிருந்தார்.

இதன்போது இனிமேலும் பாடசாலைகளை மூடி வைத்திருப்பது நடைமுறைக்குப் பொருத்தமற்ற விடயம் என்றும், அதன் காரணமாக இயலுமான வரை விரைவில் பாடசாலைகளை மீளத் திறக்க வேண்டும் என்றும் நீலிகா தெரிவித்தார் என்று குறிப்பிட்டு ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இது தொடர்பில், பேராசிரியர் நீலிகா மலவிகே தனது உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

பாடசாலைகளை மீளத்திறக்க வேண்டும் என்று நான் கூறவில்லை. தற்போது நாடு முடக்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில் இப்போதுதான் தொற்றாளர்கள் மற்றும் இறப்புக்களின் எண்ணிக்கை ஓரளவுக்குக் குறைவடைந்து வருகின்றது என்று சுட்டிக்காட்டினேன். அவ்வாறிருக்கையில் கலந்துரையாடலில் ஒரு வசனத்தை மாத்திரம் எடுத்து, அதனைத் தலையங்கமாக வெளியிடும் பட்சத்தில் அதனால் எத்தகைய பாதிப்புக்கள் ஏற்படக்கூடும் என்பதை ஊடகங்கள் அறியவில்லையா?.

ஊடகங்களின் இத்தகைய செயற்பாடுகளால் பெரிதும் கவலையும், களைப்பும் அடைகின்றேன். ஊடகங்களால் வெளியிடப்பட்ட செய்திகளை நம்பி, அதன் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் என்னைத் தாக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் பதிவுகளை இட்டவர்களுக்குக் கூறுவதற்கு என்னிடம் எதுவுமில்லை என்று அவர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (ம-4)

# கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் துரோகங்களை அரங்கேற்றும் அரசு!

*ஜே.வி.பி. கடும் சீற்றம்*



கொழும்பு, செப். 9

கொரோனாப் பெருந்தொற்று நெருக்கடி நிலைமையைத் தமக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, மக்களுக்குத் துரோகம் இழைக்கும் வகையிலான மிக மோசமான சட்டமூலங்களைத் தற்போதைய அரசு நிறைவேற்றி வருகின்றது. என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கொரோனாப் பெருந்தொற்று நிலையால் நாட்டு மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும், வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக உரிய நேரத்தில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. தடுப்பூசித் திட்டம்கூட தாமதமாகவே ஆரம்பமாகியது. தாமதித்தேனும் இந்நடவடிக்கை ஆரம்பமானதை வரவேற்கின்றோம். ஆனால் தடுப்பூசி திட்டத்தில் இன்றளவிலும் குளறுபடி தொடர்கின்றது. இதனால்தான் விசேட மருத்துவர் ஒருவர்கூட தொழில்நுட்பக் குழுவில் இருந்து விலகியுள்ளார்.

தடுப்பூசித் திட்டத்தின்போது சுகாதாரத்துறையினருக்கும், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்றே பரிந்துரைக்கப்பட்டிருந்தது. குறித்த பரிந்துரையைப் புறந்தள்ளிவிட்டு தடுப்பூசி விடயத்தில் அரசியல் தீர்மானமே எடுக்கப்பட்டன. 10 ஆயிரம் உயிர்கள் பறிபோனதற்கு இந்த நிலைமையே காரணம். ஏனெனில் கொரோனா மரணங்களில் 80 முதல் 90 வீதம் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

அதேவேளை, நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் மக்களுக்குத் துரோகம் இழைக்கும் வகையிலான சட்டமூலங்கள் நிறைவேற்றப்பட்டுவருகின்றன. கறுப்புப் பணத்தை சட்டபூர்வமாக்குவதற்கான சட்டமூலம்கூட நிறைவேற்றப் பட்டுள்ளது. அதாவது கொரோனா நெருக்கடியைக்கூட தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி மக்களுக்குத் துரோகமிழைக்கும் செயற்பாடுகளை அரசு தொடர்கின்றது.' - என்றார். (ம-44)

# ஊஞ்சல் துணியில் சிக்கி 11 வயதுச் சிறுமி இறப்பு



கொழும்பு, செப். 9

குழந்தைக்காக கட்டப்பட்டிருந்த ஊஞ்சல் துணியில், கழுத்து இறுகி, சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை கேகாலை தெரணியாகல மாளிபொட தோட்டத்தின் நிந்தகமப் பகுதியில் நடந்துள்ளது. 11 வயதான டில்மினி என்ற பாடசாலைச் சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டில் கட்டப்பட்டிருந்த ஊஞ்சலில் அவர் விளையாடிக் கொண்டிருந்த தருணத்தில், துணியில் சிக்குண்டு உயிரிழந்தார் என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-4)

*நிதிச் சட்டவரைபு*

# 90 மேலதிகமான வாக்குகளால் நாடாளுமன்றில் நிறைவேற்றம்

கொழும்பு, செப். 9

நிதிச் சட்டவரைபு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவால் நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் முன்வைக்கப்பட்டு விவாதத்துக்குட்படுத்தப்பட்டது.

வாக்கெடுப்பின்போது சட்ட வரைபுக்கு ஆதரவாக 134 வாக்குகளும், எதிராக 44 வாக்குகளும் அளிக்கப்பட்டன. அதற்கமைய 90 மேலதிக வாக்குகளால் நிதிச் சட்ட வரைபு நிறைவேற்றப்பட்டது. இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதில் நிதிச் சட்ட வரைபுக்கு ஆதரவாக அரச தரப்பினர் வாக்களித்த அதேவேளை எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன எதிராக வாக்களித்தன. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி., தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் எம்.பி. ஆகியோர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இதேவேளை, 61ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவைச் சட்டத்தின் கீழான கட்டளை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டமூலம், உற்பத்தி வரிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழான கட்டளைகள், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் வாக்கெடுப்பின்றி திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டது.

இது தொடர்பான விவாதத்தின் முடிவில் சட்டவரைபு தொடர்பான வாக்களிப்பிலிருந்து தாம் விலகியிருப்பதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. சபாநாயகருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சட்ட வரைபில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து நாடாளுமன்றம் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டது. (ம-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்குப்பிட்டிப் பாலத்துக்கு புற்றுநோய் பூரண சிகிச்சையளிப்பார்களா?

பொறியியலாளர்
சி.உருத்திரலிங்கம்

யாழ்ப்பாண மாவட்டத்தையும், கிளிநொச்சி மாவட்டத்தையும் இணைக்கும் மிக முக்கியமான பாலமாக சங்குப்பிட்டிப் பாலம் இருக்கின்றது. ஏ - 9 கண்டி வீதிக்கு நிகராக, சங்குப்பிட்டிப் பாலம் அமைந்திருக்கும் ஏ - 32 வீதியூடாகவும் போக்குவரத்து நிகழ்கின்றது. கனரக வாகனங்களிலிருந்து அனைத்து வகையான வாகனங்களும் சங்குப்பிட்டிப் பாலத்தின் ஊடாகப் பயணிக்கின்றன. சாதாரணமாக நாள் ஒன்றுக்கு 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் சங்குப்பிட்டிப் பாலத்தின் ஊடாகப் பயணிக்கும் நிலையில், பயணிகளின் உயிருக்கு உலைவைக்கும் நடவடிக்கைகளுக்கு அதிகாரிகள் துணைபோகின்றனரா என்ற சந்தேகம் எழுகின்றது. சங்குப்பிட்டிப் பாலத்தில் ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பில் அண்மையில் ஊடகங்களில் செய்தி வெளிவந்திருந்தது. அதன் பின்னர் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் அதனைச் சென்று பார்வையிட்டிருந்தனர்.

அதனைப் பார்வையிட்ட பின்னர், ‘பாலத்தில் மிகப்பெரிய குறைகள் ஒன்றும் இல்லை. காணப்படும் குறைகளைப் புனரமைக்கும்படி பணிப்புரைகள் வழங்கப்பட்டு அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மக்கள் பயப்படும் அளவுக்கு இது ஒரு பிரச்சினையே இல்லை' எனவும் கூறப்பட்டுள்ளது.


குற்றம் செய்தவனிடத்தே நீதியை வழங்கக் கோரும் போது இவ்வாறான கருத்துக்கள் வெளிப்படுவது ஒன்றும்


**பாலத்தில் இரும்புக் கறள் தோன்றியுள்ளது. அதனை உளியினால் அகற்றி சாண்ட் பேப்பரால் உரசி, அரிப்பு எதிர்ப்பு வண்ணப் பூச்சு (அன்டிகுறொஸ் பெயின்ட்) அடித்து பூசி மெழுகினாலும் அந்தச் செயற்பாட்டைப் பூரண கறள் அகற்றும் செயற்பாடாகக் கருத முடியாது.**


ஆச்சரியபடக்கூடியதல்ல. இதேவேளை நீண்ட காலமாகப் பொறியியலாளராகப் பணியாற்றும் நான், பல்லாயிரம் மக்கள் பயணிக்கும் சங்குப்பிட்டிப் பாலத்தின் உண்மை நிலையை வெளிக்கொண்டு வருவதற்காக அதனை நேரில் சென்று பார்வையிட்டிருந்தேன்.

கடல் நீருள்ள பகுதிகளுக்கு - சுற்றுச் சூழலுக்கு சாதகம் இல்லாத இடத்துக்கு- எஃகுவினாலான (ஸ்டீல்) பாலம் பொருத்தமற்றது. ஆனாலும் அதனைப் பயன்படுத்தி பாலம் அமைக்கப்பட்டதால், அதனை உரியமுறையில் பராமரிக்கவேண்டும். ஆனால் கடந்த காலங்களில் பாலம் உரிய முறையில் பராமரிக்கப்படவில்லை.

பாலத்தில் இரும்புக் கறள் தோன்றியுள்ளது. அதனை உளியினால் அகற்றி சாண்ட் பேப்பரால் உரசி, அரிப்பு எதிர்ப்பு வண்ணப் பூச்சு (அன்டிகுறொஸ் பெயின்ட்) அடித்து பூசி மெழுகினாலும்







அந்தச் செயற்பாட்டைப் பூரண கறள் அகற்றும் செயற்பாடாகக் கருத முடியாது.

பாலத்தின் உறுதிப்பாடு அதன் இரு முனைகளிலும் இணைக்கப்பட்டுள்ள தாங்குதட்டிலேயே (பியரிங் பிளேட்ஸ்) உள்ளது. அது முக்கியமானது. அதுவும் எஃகுவினால் ஆனது. அதுவும் கறளுக்கு உள்ளாகி தனது சக்தியை இழந்து வருகின்றது.

புற்றுநோய் போன்ற இந்த துருப்பிடித்தல் என்ற வியாதியை கொத்தமல்லி ரசம் குடிப்பது போல வெறும் சாண்ட் பேப்பரைப் பாவித்து அகற்ற முடியாது. ஆனாலும் தற்போது சங்குப்பிட்டிப் பாலத்துக்குச் செய்யப்பட்ட பரிகாரம் அரைகுறையானது. கறளை அகற்றாமல், அன்டிகுறொஸ் பெயின்ட் அடிப்பதால் எந்தப்பயனும் இல்லை.

கறளை அகற்றுவதற்கான முறைகள் உண்டு. அதற்குரிய திரவம் உண்டு. அது இங்கும் உள்ளது. கொழும்பில் சில வேளைகளில் மேம்பட்ட திரவம் இருக்கலாம். மக்கள் பிரதிநிதிகளாக அரசில் உள்ளவர்களை அதைக் கொழும்பிலிருந்து கொண்டுவந்து தரக்கூடியவர்கள்தான். கறளை முழுமையாக அகற்றி சாணை பிடித்ததன் பின்னர் வேதாளம் மீண்டும் மரத்தில் ஏறா வண்ணம் கறளினைத் தடுப்பதற்குப் பலவித தீந்தைகள் எமது சந்தையிலுண்டு.

இன்னுமோர் முறையும் உண்டு. மணல் வீச்சு முறை என்று சொல்வார்கள். அதற்குரிய இயந்திரம் இங்கு ஒப்பந்த வேலைகளில் ஈடுபடும் தென்னிலங்கை நிறுவனங்களிடம் உண்டு.

இவை எல்லாம் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பணியாற்றும் பொறியியலாளர்களுக்கும் தெரியாதவையல்ல. சங்குப்பிட்டிப் பாலத்தில் கறள் இவ்வளவு தூரம் இருப்பதற்குக் காரணம், அதனை ஒழுங்காகப் பராமரிக்கவில்லை என்பதுதான். கொங்கிறீட்டில் அமைந்த பாலம் என்றால் பராமரிப்பு வேலை இலகுவானது.

**பாலங்களில் எப்போதும் கறள் வராது பார்த்துக் கொள்ளவேண்டும். கறள் வந்த பின்னர் செய்யப்படும் பரிகாரங்கள் எல்லாமே முழுமையான தீர்வைத் தருவனஅல்ல.**


ஆனால் எஃகுவினாலான பாலங்களைப் பராமரிப்பது கடினம். அந்தப் பாலங்களில் எப்போதும் கறள் வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கறள் வந்த பின்னர் செய்யப்படும் பரிகாரங்கள் எல்லாமே முழுமையான தீர்வைத் தருவன அல்ல.

பாலத்தின் இருமருங்கிலும் எஃகுவினாலான கைப்பிடிச் சட்டங்கள் பாவனையாளர்களின் பாதுகாப்புக் கருதி அமைக்கப்பட்டுள்ளன. இவற்றையும் கறள் விட்டுவைக்கவில்லை. மக்களின் நன்மை கருதி, இரவில் அவை தெரியக் கூடியவாறு எந்தவொரு அடையாளப்படுத்தும் செயற்பாடும் செய்யப்படவில்லை.

இவ்வாறு செய்யாமை காரணமாக செம்மணியில் இரண்டு உயிர்கள் அநியாயமாக இழக்கப்பட்டன என்பதை அதிகாரிகள் மறக்கக் கூடாது.

பாலம் தொடர்பில் பல்வேறு ஆபத்துக்கள் இருக்கும் நிலையில், அவற்றை உதாசீனம் செய்வது போல பூசி மெழுகுவதற்கு அதிகாரிகள் ஏன் முற்படுகின்றார்கள்?

மக்கள் பிரதிநிதிகளும், மாவட்டச் செயலரும் இந்தப் பாலம் தொடர்பில் கரிசனை எடுக்கவேண்டும். ஏதாவது ஒரு பேரனர்த்தம் இடம் பெற்ற பின்னர் கூச்சலிட்டு விசாரணைக்குழு அமைப்பதில் பயனில்லை. வரும் முன் காப்பதே உசிதம்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### ஈழத்தமிழர்கள் தொடர்பான

# தமிழக அரசின் அறிவிப்புகளுக்கு புலம்பெயர் அமைப்புகள் பாராட்டு

**கொழும்பு, செப்.9**

**தமிழக முகாம்கள் மற்றும் வெளிப்பகுதிகளில் தங்கியுள்ள ஈழத்தமிழ் உறவுகளின் கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு நலத் திட்டங்கள் தொடர்பான தங்களின் அண்மைய சட்டப்பேரவை அறிவிப்புக்காக, உலகெங்கும் வாழும் ஈழத் தமிழர்கள் சார்பில் எமது வரவேற்பையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

இவ்வாறு புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியா, பிரிட்டன், பிரான்ஸ், கனடா, நோர்வே, தென்னாபிரிக்கா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இயங்கும் 8 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

தமது சொந்த நிலங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டும், கதியற்றும் தாய்த்தமிழகம் வந்தடைந்த எம் சொந்தங்களில் கணிசமானோர் தொடர்ந்தும் பலவித இன்னல்களுக்கு முகங்கொடுத்து வரும் நிலையில் தங்களது அறிவிப்பானது, அவர்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி, ஒளிமயமான ஓர் எதிர்காலத்தை நோக்கி அவர்களை நகர்த்தும் என்று நம்புகின்றோம்.

பொறியியல், வேளாண், வேளாண் பொறியியல், இளங்கலை, முதுகலை மற்றும் பல துறை மாணவர்களுக்கு தாங்கள் அளித்திருக்கும் உதவிக்கும், ஊக்கத்துக்கும் புலம்பெயர் ஈழத்தமிழ் அமைப்புகள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அதேபோல மருத்துவம் படிக்கவும், உதவிகள் செய்ய வேண்டும் என்று தாழ்மையுடன் கோருகின்றோம்.

நாடற்றவர்களாக எதிர்காலம் தொடர்பான கேள்விக்குறிகளோடு இருந்த எம் மக்களுக்கு, இந்தியக் குடியுரிமை வழங்குதல் அல்லது இலங்கை திரும்ப ஏற்பாடுகள் செய்வது தொடர்பாக ஆலோசனைக் குழு அமைக்கும் தங்கள் அறிவிப்பு, நம்பிக்கையூட்டுவதாக அமைகிறது.

இது தொடர்பான தங்கள் வருங்கால செயற்திட்டங்களில், புலம்பெயர் ஈழத்தமிழ் அமைப்புக்கள் சார்பில், இணைந்து பயணிக்கத் தயாராகவும் ஆவலோடும் இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த காலங்களில் தவிர்க்க முடியாமல் நலிவுற்றிருந்த தாய்த் தமிழக ஈழ தொப்புள்கொடி உறவினைத் தங்களது இந்தக் கரிசனை சார் நலத்திட்ட முன்னெடுப்பானது மேம்படுத்தும் என்று நாம் திடமாக நம்புவதோடு, ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதற்கான எமது போராட்டத்துக்கும் தங்கள் தார்மீக ஆதரவினைத் தொடர்ந்து நல்கி உதவவேண்டும் என்றும் அன்புரிமையோடு வேண்டி நிற்கின்றோம். -என்றுள்ளது.

(எ-இ)



# தொடரும் கிரவல் அகழ்வால் பெருமளவு காடுகள் அழிப்பு

### மரக்கன்றுகளை நடுகை செய்யக் கோரிக்கை

முல்லைத்தீவு, செப்.9

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கொக்காவில் பகுதியில் தொடர்ச்சியாக பெருமளவில் கிரவல் மண் அகழப்படுவதால், அந்தப் பகுதியில் காடுகள் அழிவடைந்து வருகின்றன. எனவே அழிக்கப்பட்ட மரங்களுக்குப் பதிலாகப் புதிய மரங்களை நடுகைசெய்யவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கிரவல் மண் அகழ்வு அதிகம் இடம்பெற்று வருவதால், பெருமளவு காடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் புதிய மரங்களை நடுகைசெய்யவேண்டியுள்ளது.

இனிவரும் மழையைப் பயன்படுத்தி மரக்கன்றுகளை நடுகை செய்வதற்கான முயற்சிகளை அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும்.

அதேபோன்று புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்கு, துணுக்காய், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் மரங்கள் அழிக்கப்பட்ட இடங்களில் புதிய மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட வேண்டும் என்று பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன. (ஒ-4-13)

# 2,500 குடும்பங்களுக்கு ரூ.2,000 கொடுப்பனவு

முல்லைத்தீவு, செப்.9

முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு, 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு மாவட்ட உதவிச் செயலர் க.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கொரோனா பேரிடர் காலத்தில் வாழ்வாதாரங்களை இழந்த, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு நாடு முழுவதும் வழங்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை எவ்விதமான உதவிகளையும் பெற்றுக் கொள்ளாத, வாழ்வாதாரங்களை இழந்த குடும்பங்களுக்குக் குறித்த கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றது.


இந்தக் கொடுப்பனவுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 ஆயிரத்து 553 குடும்பங்கள் பரிந்துரைக்கப்பட்டன.

2 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு மட்டும் முதற்கட்டமாக அனுமதிகிடைத்துள்ளது. அதற்கமைவாக 5 மில்லியன் ரூபா நிதி பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஒ-4-20)

# பெண்கைதிகளின் குழந்தைகள் நலன் தொடர்பில் விசேட கவனம்

### பிரதமர் மஹிந்த பணிப்பு



வெலிக்கடை சிறைச்சாலையை மில்லேவவுக்கு இடமாற்றும் போது பெண் கைதிகளுடன் உள்ள குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் நலன் தொடர்பாக விசேட கவனம் செலுத்தவேண்டும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலை கட்டடத்தொகுதியை ஹொரண மில்லேவ பிரதேசத்திலுள்ள 200 ஏக்கர் நிலப்பரப்புக்கு இடமாற்றம் செய்யும் திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக ஆராய்வதற்காக சூம் தொழில்நுட்பம் ஊடாக இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

30 பில்லியன் ரூபா செலவிலான இந்தத் திட்டத்தை 2024ஆம் ஆண்டளவில் நிறைவுசெய்வதற்கு எதிர்பார்ப்பதாக நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் அதிகாரிகள் இதன்போது பிரதமருக்கு தெரிவித்தனர்.

பொரளையிலுள்ள வெலிக்கடை சிறைச்சாலை 40 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். அங்குள்ள செபர்ல் வார்டு மற்றும் சிறைச்சாலைக் தலைமையகக் கட்டடம் என்பவற்றை ஹோட்டல் திட்டமொன்றுக்காக ஒதுக்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை திட்டமிட்டுள்ளது.

முதலில் மகசின் சிறைச்சாலையும் பின்னர் ஏனைய சிறைச்சாலைகளையும் மில்லேவ பிரதேசத்துக்கு இடமாற்றம் செய்வதுடன், வெலிக்கடை தூக்குமேடையும் ஹொரண பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் கட்டமைப்பில் 11 ஆயிரம் கைதிகளை சிறைப்படுத்துவதற்குப் போதுமான வசதிகளே காணப்படுகின்ற போதிலும், அதைவிட மூன்று மடங்கு அதிகமானோர் சிறைப்படுத்தப்பட்டுள்ளதால் சர்வதேச ரீதியாக அது தொடர்பில் விமர்சனங்கள் எழுந்துள்ளதாகத் தெரிவித்த நீதி அமைச்சர் அலி சப்ரி பொரளையிலுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையை மில்லேவவுக்கு இடமாற்றுவது கட்டாயமானதாகும் எனச் சுட்டிக்காட்டினார்.

(எ-இ)

# பத்து ஆண்டுகளாக பஸ் சேவையில்லை

### அமைதிபுரம் மக்கள் அவதி

கிளிநொச்சி, செப்.9

அமைதிபுரம் கிராமத்துக்கு பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கிராம மக்கள் கடந்த பத்தாண்டுகளாகப் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைப் புறத்தில் அமைதிபுரம் கிராம அலுவலர் பிரிவு அமைந்துள்ளது. திருமுறிகண்டியில் இருந்து வன்னேரிக்குளம் செல்லும் வீதியில் அமைந்துள்ள கிராமத்தில் 125 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன.

இவர்கள் துணுக்காய் பிரதேச செயலகத்துக்குச் செல்வது என்றால் 30 கிலோமீற்றர் வரை செல்ல வேண்டும். முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்குச் செல்வது என்றால் 100 கிலோ மீற்றருக்கு அதிகமான தூரம் பயணிக்க வேண்டும்.

துணுக்காய்க்கும் அக்கராயனுக்கும் இடையில் நடைபெற்ற பஸ் சேவைகள் கடந்த பத்தாண்டுகளாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டங்களில் ஆராயப்பட்டாலும் முடிவுகள் எடுக்கப்படவில்லை.

எனவே மாவட்டச் செயலாளர் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஒ-4-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ் நிலைய வளாகத்தில் கடைகள் அமைக்க முயற்சி

## தடுத்து நிறுத்தியது அதிகார சபை



கிளிநொச்சி, செப்.9

**கிளிநொச்சி பஸ் நிலைய வளாகத்தில் அத்துமீறி கடைகள் அமைக்க முயற்சிக் கப்பட்ட நிலையில், அதனை மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை தடுத்து நிறுத்தியது.**

பஸ்நிலையத்தின் அபிவிருத்திப் பணி கள் இடம்பெற்றுவரும் நிலையில், அங்கு அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கடைகளை அகற்ற நடவடிக்கை எடுக் கப்பட்டது.

இந்த நிலையில் தற்காலிக கடைகளை பஸ்நிலைய வளாகத்தில் அமைக்க வர்த் தகர்கள் முயன்றனர்.

இதன்போது அங்கு வருகை தந்திருந்த வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவ ரத்து அதிகார சபையின் மாவட்ட அலு வலர் ஈ.சாந்த மெடில்டா, வர்த் தகர்களுடன் கலந்துரையாடி னார். பஸ் நிலையம் திறக்கப்பட்டதன் பின்னரே வர்த்தக நிலையம் அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று வர்த்தகர்களுக்கு எடுத்துக் கூறி னார். அபிவிருத்திக்கு எவ்வித பாதிப்பும் இல்லாது தாம் செயற்படுவோம் என்று வர்த்தகர்கள் தெரிவித்தனர். எனினும் அதிகார சபையினர் அதனைத் தடுத் தனர்.

அதேவேளை தற்காலிக் கடைகளை பொருத்தமான பகுதிகளில் அமைத்து, தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஒ-4-113)

---

தனியார்

## மருத்துவமனைகளில் குவியும் நோயாளர்கள்

வவுனியா, செப்.9

வவுனியாவில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் சூழலில், தனியார் மருத்துவமனைகளை நாடும் நோயா ளர்களின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது.

நகரப்புறங்களில் அதிகளவானோருக் குக் காய்ச்சல், தடிமன் போன்ற உபா தைகள் ஏற்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றுக்கு அஞ்சி, அவர்கள் தனி யார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கொரோனாத் தொற்றுக்கான அறி குறிகளுடன் அரச மருத்துவமனை களுக்குச் சென்றால் பி.சி.ஆர் மற் றும் அன்டிஜென் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படும் என்ற அச்சத்தில் பலர் தனியார் மருத்துவமனைகளை நாடுவதை அவதானிக்க முடிந்துள் ளது. (ஒ-4-110)

---

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு ரூ.90 மில்லியன் நிதியுதவி

மன்னார், செப்.9

மன்னார் மாவட்டத்தின் சமுர்த்திப் பய னாளிகளைப் பொருளாதார ரீதியாகப் பலப்படுத்தும் நோக்குடன் 90 மில்லி யன் ரூபா நிதி உதவி கிடைக்கப்பெற் றுள்ளது என்று மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் ஐ.அலியார் தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மாவட் டத்தின் 5 பிரதேச செயலகங்களிலிருந் தும் 2 ஆயிரத்து 400 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அவர்களுக்கான திட்டங்கள் முன்னெ டுக்கப்பட்டுள்ளன. இவர்களின் வாழ் வாதார உயர்வுக்காக, 90 மில்லியன் ரூபா நிதியுதவி கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தி விவசா யம், கைத்தொழில், மீன்பிடி, மீன் வளர்ப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளும், அதற்கான பயிற்சிகளும் மேற்கொள் ளப்படும். இதற்கான சகல நடவடிக்கை களும் சமுர்த்தித் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கு அமைவாகவும், மன்னார் மாவட்டச் செயலாளரின் பணிப்புரைக்கு அமைவாகவும் முன் னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கான நிதி ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக் கும் விடுவிக்கப்பட்டுள்ளது.


அதற்கமைவாக ஆரம்ப வேலைத் திட் டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது பயனாளிகளுக்குப் பெரும் வாய்ப் பாகும். -என்றார். (ஒ-4-60)

---

# கொரோனாத் தடுப்பூசிக்கு புதிய விண்ணப்பப்படிவம்

### வவுனியா மக்களுக்கு அலைச்சல்



COVID 19 CONSENT FORM

1. NIC No -
2. Name -
3. Permanent Address -
4. Telephone No
5. Selection Criteria
   - A. Health Staff ☐ B. Front line Workers-Other than health staff & security forces ☐
   - C. More than 60 years of age ☐ D. With comorbidities in 30-60years age group ☐
   - E. Security Forces ☐ F. Without comorbidities in 30-60 age group ☐
   - G. Less than 30 years of age ☐ H. Pregnant Mother ☐
   - I. Education Staff (Teachers & Others) ☐
6. Allergies :- Yes No
7. Taking Treatment for any chronic disease :- Yes No
8. Comorbidities
   - A. Diabetes Mellitus ☐ B. Hypertension ☐ C. Ischemic Heart Disease ☐
   - D. Bronchial Asthma ☐ E. Chronic Obstructive Airway Disease ☐
   - F. Chronic Kidney Disease ☐ G. Malignancies ☐ H. Other ☐
9. Vaccine Product
10. Batch Number
11. Age :-
12. Sex :- F M
13. G.S Division & No

I confirmed that the above person is living in my division.

Date G.S Signature

வவுனியா, செப்.9

வவுனியாவில் கொரோனாத் தடுப்பூசி யின் இரண்டாம் டோஸைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால், புதிய விண் ணப்பப்படிவம் ஒன்றில் கிராம அலுவலர் உறுதிப்படுத்த வேண்டும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் கிராம அலுவலர் அலு வலகங்களுக்கு அலைந்து திரிய வேண் டியுள்ளது.

தடுப்பூசி பெற்றுக் கொள்ள வேண்டியோர் கிராம அலுவலரிடம் விண்ணப்பத்தில் கையொப்பத்தைப் பெற்று, அதனைத் தடுப்பூசி வழங்கப்படும் இடங்களில் ஒப்ப டைக்க வேண்டும்.

இரண்டாம் டோஸைப் பெறுவதற்குரிய தடுப்பூசி அட்டை உள்ள போதும், வேறு மாவட்டங்களில் பின்பற்றப்படாத நடைமுறையாக, புதிய விண்ணப்பபடிவத்தை நிரப்புவதற்காக வவுனியா மக் கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு வேளையிலும் மக்கள் வீதிகளில் அலைந்து திரிந்த வண்ணம் உள் ளனர். கிராம அலுவலகங்களில் மக்கள் அதிகளவில் ஒன்றுகூட வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இதனால் தொற்றுப் பரவும் அபாயம் உள்ளது என் றும் அச்சமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்த வேண் டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-110)

---

## சிதம்பரநாதனின் பிரிவு கலையுலகுக்கு பேரிழப்பு

### ஆறு.திருமுருகன் இரங்கல்

யாழ்ப்பாணம், செப்.9

புகழ்பூத்த நாதஸ்வர வித்துவான் கலாபூஷணம் சிதம்பரநாதனின் பிரிவு, கலையுலகுக்குப் பேரிழப்பு என்று தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி. ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது,

இவர் அளவெட்டியில் பிறந்து தனது சிறு வயதிலேயே நாதஸ்வரக் கலையை நல்ல முறையில் கற்றுத் தேறி கலைப்பணி ஆற்றியவர். புகழ் பூத்த நாதஸ்வர வித்துவான் மாவிட்ட புரம் ராசாவிடம் குருகுல வாசமாகக் கற்று, பின்னர் தமிழ் நாட்டிலுள்ள பிரபல வித்துவான்களிடம் மேலதிக மாகக் கலை நுட்பங்களைக் கற்றவர். உயர்ந்த இசைஞானமும் உயர்ந்த பண்புகளும்மிக்க இவர், இலங்கை யிலுள்ள பல திருக்கோயில்களின் மகோற்சவங்களைத் தனது வித்துவத் தால் சிறப்பித்தவர்.

கம்பன் விழா அரங்குகளில் இவரது நாதஸ்வரக் கச்சேரி தவறாமல் இடம் பெறுவது வழக்கம். லண்டன், கனடா, அவுஸ்திரேலியா மற்றும் பல ஐரோப் பிய நாடுகளில் சிறப்பு நிகழ்வுகளை நடத்திச் சிறப்புப் பெற்றவர். இவரது கலைச் சேவையைப் பாராட்டி கௌர வப் பட்டங்களை, பல நிறுவனங்கள் வழங்கிப் பெருமைப்படுத்தின.

இசை நுணுக்கங்கள் நன்கு அறிந்த இவரது இழப்பு கலையுலகுக்குப் பேரி ழப்பு எனலாம். நாதஸ்வரக் கலை ஞர்களுக்கு முன்மாதிரியாகவும், நல்லொழுக்க சீலராகவும் விளங்கிய நாதஸ்வர மேதையின் ஆத்மா சாந் தியடைய பிரார்த்திப்போம். -என்றுள் ளது. (ஒ-4)

---

# அமெரிக்க நிறுவனத்தால் மருத்துவ உபகரணங்கள்

யாழ்ப்பாணம், செப்.9

அமெரிக்க இலங்கை நிறுவனத்தால், யாழ்.போதனா மருத்துவமனைக்கு ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்கள் கைய ளிக்கப்பட்டன.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப் பட்டவர்கள் மற்றும் ஏனைய நோயா ளர்களுக்காகப் பயன்படுத்தக்கூடிய மருத்துவ உபகரணங்களே கையளிக் கப்பட்டன.

யாழ்.பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மற்றும் கொவிட்-19 கட்டுப்பாட்டு செயலணியின் இணைப்பாளருமான மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக் கின் ஆலோசனைக்கு அமை வாக, 521 காலாட் படைப்பி ரிவினரால் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.

இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் யாழ். போதனா மருத்துவம னையின் பணிப்பாளர் மற்றும் மருத்துவ அதிகாரிகளிடம் உபகரணங்களைக் கையளித்தனர். (ஒ-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர்கள் சிலருக்கு 'கோட்டா' முறை தடுப்பூசி!

## அநுரகுமார குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 9

சில அமைச்சர்களுக்கு கோட்டா முறையில் தடுப்பூசி வழங்கப்பட்டது. கெஹலிய ரம்புக்வெலவுக்கு மூவாயிரம் ஊசிகள் வழங்கப்பட்டன. அவை ஜெயவர்தனபுர வைத்தியசாலையிலேயே வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் நூறு தடுப்பூசிகள் பந்துல குணவர்தனவுக்கு வழங்கப்பட்டன - இவ்வாறு சபையில் நேற்று போட்டுடைத்தார் ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கும், கொரோனாத் தொற்றால் ஏற்பட்டுள்ள அழிவு நிலைமைக்கும் இலாப நோக்கத்தை அடிப்படையாக கொண்ட அரசியலே காரணம் என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இதற்கு முன்னர் இந்த நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அரசில் உள்ளவர்கள், எங்களிடம் வேண்டிய அளவுக்கு பணம் உள்ளது, நாட்டை சிறப்பாகக் கொண்டு செல்ல முடியும் என்றே கூறினர். ஆனால், நாட்டின் அரச வருமானத்தில் பிரச்சினை இருப்பதாகவும், வர்த்தகத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினை மற்றும் டொலர் பற்றாக்குறை பிரச்சினை தொடர்பாக இந்த நாடாளுமன்றத்தில் இப்போது நிதி அமைச்சர் கூறியுள்ளார்.

இந்தப் பொருளாதார நெருக்கடிக்கு அரசியலே காரணம். வேலைத்திட்டம் ஒன்றுக்காகச் செலவிடப்பட்ட தொகையிலும் பார்க்க குறைந்தளவான நிதியே அதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகுதிப்பணம் அரசியல்வாதிகளின் பைகளுக்கே சென்றுள்ளது. இந்த அரசியலில் மாற்றம் ஏற்படவில்லை. அத்துடன் கொரோனாத் தொற்று நிலைமையும் பெரும்அழிவுக்கு வித்திட அரசியலே காரணமாகும்.

கொரோனாத் தடுப்பூசி வழங்குவதிலும் அரசியல் இருந்தது. சில அமைச்சர்களுக்கு கோட்டா முறையில் தடுப்பூசி வழங்கப்பட்டது. கெஹலிய ரம்புக்வெலவுக்கு மூவாயிரம் ஊசிகள் வழங்கப்பட்டன. அவை ஜெயவர்தனபுர வைத்தியசாலையிலேயே வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் நூறு ஊசிகள் பந்துல குணவர்தனவுக்கு வழங்கப்பட்டன.

இதனை நான் வெளியிலும் கூறியுள்ளேன். இது நாடாளுமன்ற சிறப்புரிமைக்கு அமைய மேற்கொள்ளும் கருத்து இல்லை. ஊடகச் சந்திப்பிலும் கூறியுள்ளேன். வேண்டுமென்றால் வழக்குப் போடுங்கள். அதற்கும் முகம்கொடுக்க நான் தயாராகவே இருக்கின்றேன். இந்த அரசியலை மாற்றாது இந்தப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியுமென்று நினைக்க வேண்டாம்.

இதேவேளை, நிதிச் சட்டமூலத்தில் வெளிப்படுத்தப்படாத சொத்துக்களை வெளிப்படுத்துவது ஓர் அம்சம். இவ்வாறு சொத்துக்களை வெளிப்படுத்தாதிருப்பவர்கள் யார்? அதிகமானோர் அரசியல்வாதிகளும், வர்த்தகர்களும்தான், முறையற்ற வகையில் சொத்துக்களை சம்பாதித்த அரச ஊழியர்கள் குழு ஒன்றும் உள்ளது. அத்துடன் போதைப்பொருள், பாதாளக் குழுவில் முறையற்ற சொத்துக்களை சேர்த்தவர்களும் உள்ளனர். ஆனால், இந்தச் சட்டமூலத்தின் மூலம் அவர்களை விடுவிக்கும் வகையிலேயே அமையும். இது நியாயமாகுமா? முறையாக சொத்துக்களை சேர்த்தவர்களும் முறையற்ற வகையில் சேர்க்கலாம்.

இதேவேளை, வரி விடயத்தில் வரி செலுத்தாத பலரும் உள்ளனர். அந்த வரிகளை நீக்குவதற்கு இந்தச் சட்டமூலத்தில் வழியுள்ளது. இது சாதாரண பொது மக்களுக்கான சட்டமா? மோசடியான வகையில் சொத்துகளை சேர்த்தவர்கள் மற்றும் வரி செலுத்தத் தவறியவர்களை இதில் இருந்து விடுவிப்பதால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் நிலைமையும் ஏற்படலாம்' - என்றார். (ம-22)

# 94லட்சம் பேருக்கு இரு டோஸ்களும்!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு



**கொழும்பு, செப். 9**

**நாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 94 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளனர் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

இதுவரை 27.2 மில்லியன் தடுப்பூசிகள் இலங்கைக்குக் கிடைத்துள்ளன. அவற்றில் 94 லட்சத்து 14 ஆயிரத்து 852 பேருக்கு இரண்டு டோஸ்களும் ஏற்றப்பட்டுள்ளன. இதனிடையே, 20 முதல் 29 வயதுக்குட்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 60 வயதுக்கு மேட்பட்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் தடுப்பூசி செலுத்தும் திட்டமும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டம் மேலும் விஸ்தரிக்கப்படவேண்டும்

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 9

இரணைமடுக் குடிதண்ணீர்த் திட்டத்தை மேலும் சில பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்று வலிகாமம் மேற்குப் பிரதேச சபை கோரிக்கை விடுத்துள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ச.ஜெயந்தனின் வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டம் சித்தன்கேணி வரையில் நிறைவடைந்துள்ளது. எனினும் சித்தன்கேணியுடன் நின்றுவிடாது குடிதண்ணீர் தேவையுடைய வேறு பகுதிகளான சுழிபுரம், தொல்புரம், மூளாய், பொன்னாலை, பனிப்புலம், பண்ணாகம், அராலி போன்ற இடங்களில் வாழும் மக்களும் மேற்படி திட்டத்தின் கீழ் பயனடைய ஆவன செய்யவேண்டும் என்று அந்தக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)




# உப தவிசாளர் தெரிவு

முல்லைத்தீவு,செப்.9

கரைதுறைப்பற்று பிரதேசசபைக்கு, புதிய உப தவிசாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில், சுகாதார நடைமுறைளைப் பின்பற்றி, பொலிஸாரின் கண்காணிப்புடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே உப தவிசாளர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதற்கமைவாக புதிய உபதவிசாளராக மரியநாயகம் தொம்மைப்பிள்ளை போட்டி இன்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ம-4,13)



# புலமைப்பித்தன் நேற்று மறைந்தார்

சென்னை, செப். 9

அ.தி.மு.க முன்னாள் அவைத் தலைவரும், கவிஞருமான புலவர் புலமைப்பித்தன் 85 ஆவது வயதில் நேற்றுக் காலை சென்னையில் காலமானார்.

இவர் கடந்த 28 ஆம் திகதி உடல்நலக்குறைவு காரணமாக அடையாறில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். நேற்றுக்காலை சிகிச்சை பயனின்றி காலமானார். நீலாங்கரையில் உள்ள அவரது இல்லத்தில் இறுதி அஞ்சலிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புலமைப்பித்தனின் மறைவுக்கு அரசியல் தலைவர்கள் மற்றும் திரைப்பிரபலங்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். (ம-4)

# கொரோனாத் தொற்றால் 80 பிரபலங்கள் இறப்பு!



கொழும்பு, செப். 9

இலங்கையில் கொரோனாத் தொற்றால் 80க்கும் மேற்பட்ட பிரபலங்கள் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையின்படி இதுவரை 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் நாட்டிலுள்ள அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், தொழில் வல்லுநர்கள், பிரபுக்கள் மற்றும் கலைஞர்கள் உள்ளிட்ட 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பாக பிரபல தொழிலதிபர் கப்பிற்றல் மஹாராஜா, மூத்த அரசியல்வாதி மங்கள சமரவீர மற்றும் பாடகர் சுனில் பெரேரா ஆகியோர் மிகச் சமீபத்தில் உயிரிழந்தனரென்பது குறிப்பிடத்தக்கது. (ம-4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு
15 • 01 • 1941



இறப்பு
07 • 09 • 2021

## சின்னத்தம்பி சரஸ்வதி

யாழ்ப்பாணம் புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும், கரம்பைக்குறிச்சி வரணியை வசிப்பிட மாகவும் கொண்ட சின்னத்தம்பி சரஸ்வதி அவர்கள் கடந்த (07.09.2021) செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், புஸ்பராணி, நீலாம்பிகை, காலஞ்சென்ற ஞானாம்பிகை, மோகனாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலரத்தினம், யோகேஸ்வரி, கமலாதேவி, சிவகாமி, பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விஜயராணி, தியாகேசு, கணபதிப்பிள்ளை, முதலிக்குட்டி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நகுலேஸ்வரன், ஜெயகுமார், ஜெயரூபன் ஆகியோரின் அன்பு மாமியும், கவிப்பிரியா, சங்கீதன், கானப்பிரியா, சைந்தவி, சாரங்கி, சாகித்தியன், லதாங்கன், லாவண்ணியன், லதர்ணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**மகள்கள்:**
புஸ்பராணி - 0094776258073
நீலாம்பிகை - 0094766939618
மோகனாம்பிகை - 0094779124232

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி கவிதா ஜெயகாந்தன் அவர்களின் பாசமிகு தாயார்.

### சௌந்தராம்பிகை சதாசிவம்

**07.09.2021 ஆம் திகதி இறைபதம் அடைந்துவிட்டார்.**

அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கையாக்குவதுடன், அவரின் குடும்பத்தினருக்கு எமது திணைக்கள உத்தியோகத்தர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**யாழ் மாவட்ட மனிதவள அபிவிருத்தி உதவியாளர்கள்/ அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.**

## சிறுநீரகம் தேவை

B+ இரத்த வகையை கொண்ட சிறுநீரகம் தேவை.

தொடர்பு:

**0777 110 687**

## துயர் பகிர்கின்றோம்



**தோற்றம்:01.11.1968** **மறைவு:27.08.2021**

எமது பாடசாலையின் ஆசிரியர்
நிஷாந் ஷாலினி அவர்களின் மாமியார்

### அமரர் சிவதாசன் மதனா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி**

## மரண அறிவித்தல்

பூமியில் 28 . 09 . 1950



விண்ணில் 03 . 09 . 2021

### மேரி மெக்டலின் அரியமலர் (ராசாத்தி)

யாழ். வயாவிளான் கிழக்கு, ஒட்டகப்புலத்தை பிறப்பிடமாகவும் கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி மெக்டலின் அரியமலர் (ராசாத்தி) அவர்கள் 03.09.2021 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாட்டின் மரியநேசன் அவர்களின் அன்பு மனைவியும் கியூபேட் அன்ரனி (பனை அபிவிருத்திச் சபை), ஜொனிற்றா, சோபியா, சோபனா, காலஞ்சென்ற அன்றா மாட்டின் (நோபேட்) ஆகியோரின் அன்புத் தாயாரும் லில்லிமலர் (பேபி), ஜேசுதாசன் (ஓய்வு பெற்ற தபால் ஊழியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கௌறி (PA, Hon. Minister டக்லஸ் தேவானந்தா), நோபேட் (செல்வராசா), சிவகுமார், வீரசிங்கம் (சவுதி) ஆகியோரின் அன்பு மாமியாரும் தமிழினி (FSN, Wayamba University), குழலினி (Engineering, South Eastern University), டனிஸ் - சுருதி, ஜென்சி – ஜோய் (இத்தாலி), டெஸ்மன், லக்சியா – நிக்சன் (அவுஸ்திரேலியா), லக்சன், லக்சனா (English Teachers Training College, Peradeniya), நிலக்சனா – ஜெயறோசன் (Police - SI), அன்றா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் டதுஷன், அன்சியா (அவுஸ்திரேலியா), சுபிக்சன், டெவின் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்கு இன்று (09.09.2021) வியாழக்கிழமை மதியம் 01.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டு, அஸ்தி இறை ஆசியுடன் ஒட்டகப்புலம் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

**126/14, கச்சேரி நல்லூர் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**(0706601113, 077 007 6126)**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### நாகமுத்து வள்ளியம்மை (யோகம்)

பழையகண்டி காரைநகரைப் பிறப்பிடமாகவும் நீலிப்பந்தனை காரைநகரை வசிப்பிடமாகவும் தாவடி தெற்கு கொக்குவிலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து வள்ளியம்மை கடந்த (06.09.2021) திங்கட்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன்-சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னப்பு தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகமுத்துவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தையல்நாயகி, காலஞ்சென்ற கதிராசி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற நித்தியானந்தகுமார், கருணானந்தன் (பொறியியலாளர்) ஆகியோரின் அன்புத் தாயும், ஜெயரூபியின் மாமியாரும், வைஷ்ணவி, கார்த்திகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தாவடி தெற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**மகன்**
**077 527 1673**

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை நாகராஜா

யாழ். வண்ணார்பண்ணை ஒட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராஜா அவர்கள் கடந்த (05.09.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று கனடா Scarborough வில் இறைவனடி எய்தினார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு, சிவயோகம் தம்பதிகளின் அன்பு மருமகனும்,பராசக்தி அவர்களின் ஆருயிர்க் கணவரும், கோகிலவாணி, சர்வனந்தினி, திலிப்குமார், தயாளினி, அஜித்குமார், ராஜீவ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவனேஸ்வரன், வசந்தபாலன், வாசுகி, பவானந்தன், நிருஷா, லாவண்யா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம், இராசநாயகம், அகிலாண்டேஸ்வரி மற்றும் சோமசுந்தரம், லோகேஸ்வரி, மங்களேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இராஜேந்திரன், இராஜமலர் மற்றும் பத்மதேவி, சிவநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற பரமானந்தம் மற்றும் குணவதி, பேரானந்தம், காலஞ்சென்ற இரத்தினவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜனகன், தாமிரா, பானுஜன், சமீனா, அக்ஷயா, அபினா, ஆரன், அர்வின், ஆதவ், சங்கரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.09.2021) வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொடர்புகளுக்கு**
**கோகிலவாணி - மகள்** Mobile : +14164753673
**சர்வனந்தினி - மகள்** Mobile : +16472108145
**திலிப்குமார் - மகன்** Mobile : +16473385652
**தயாளினி - மகள்** Mobile : +16475352827
**அஜித்குமார் - மகன்** Mobile : +14168587247
**ராஜீவ்குமார் - மகன்** Mobile : +12509900154
**சிவனேஸ்வரன் - மருமகன்** Mobile : +14166163943
**வசந்தபாலன் - மருமகன்** Mobile : +16472068145
**பவானந்தன் - மருமகன்** Mobile : +16473003535

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸிலின் கட்டுப்பாட்டுக்குள் மு.காங்கிரஸ் உறுப்பினர்கள்

## இம்ரான் எம்.பி. தெரிவிப்பு

முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கீமின் கட்டுபாட்டில் இல்லை. அவர்கள் முழுமையாக பஸில் ராஜபக்சவின் கட்டுபாட்டில் உள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

நிதி சட்டவரைவு வாக்கெடுப்பின் பின்னர், ஊடகங்களுக்கு அவர் மேலும் தெரிவிக்கையில்:

இன்று ஒரு கிலோ சீனியைப் பெற்றுக் கொள்ள சதொச முன்னால் நூற்றுக்கணக்கான மக்கள் பல மணி நேரம் வரிசையில் நிற்கின்றனர். நூறு ரூபாவை சேமிக்க கொரோனாத் தொற்றையும் கவனிக்காமல் வரிசையில் நிற்கின்றனர். இதுவே இந்த நாட்டு மக்களின் தற்போதைய பொருளாதார நிலை. ஆனால் மறுபக்கம் போதைப்பொருள் வியாபாரிகள், பாதாள குழு உறுப்பினர்கள், மோசடி செய்யும் வர்த்தகர்கள் மறைத்து வைத்திருக்கும் கறுப்பு பணங்களை வெள்ளையாக மாற்ற வழிவகுக்க அரசு சட்டவரைவை நிறைவேற்றியுள்ளது.

இருபதாம் திருத்தச் சட்டவரைவுக்கு ஆதரவாக வாக்களித்த பின்னர் நடைபெற்ற எந்தவொரு வாக்களிப்பிலும் கலந்து கொள்ளாத முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்தச் சட்ட வரைவுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். அவர்களின் தலைவர் எதிராக வாக்களித்துள்ளார்.

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச இந்தச் சட்ட வரைவை சமர்ப்பித்ததால் அவரை எதிர்க்க முடியாமல் ஆதரவாக வாக்களித்துள்ளனர். ஆகவே இவர்கள் இப்பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் ஹக்கீமின் கட்டுபாட்டில் இல்லை. முழுமையாக பஸில் ராஜபக்சவின் கட்டுபாட்டிலேயே உள்ளனர் என்பது தெளிவாக புலனாகின்றது - என்றார். (ம-4)

# பழுதடைந்த சீனியை விற்றவர் கைது

கொழும்பு, செப். 9

பாவனைக்கு உதவாத சீனியை விற்பனை செய்தார் என்று குற்றச்சாட்டில் வத்தளையில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

விசேட அதிரடிப்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் களஞ்சியப்படுத்தி வைத்திருந்த 6 லட்சத்து 25 ஆயிரம் கிலோக் கிராம் சீனி மற்றும் சீனிப் பாணி உள்ளிட்டவை மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக கம்பஹா நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-4)

## வல்லையில் மோதல்

# நிலைமை கைமீறியதால் இராணுவம் களமிறக்கம்

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இரு கிராமத்தவரிடையே நேற்று முன்தினம் இரவு ஆரம்பித்த மோதல் நேற்றுமுன்னிரவு வரை தொடர்ந்தது. பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியாதளவுக்கு நிலைமை கைமீறியதால் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு கிராமத்தவரிடையேயும் கடந்த ஒரு மாதமாக மோதல் இடம்பெற்று வருகின்றது. பொலிஸார் கட்டுப்படுத்தச் செல்லும் நேரங்களில் அமைதியாவதும் பின்னர் தாக்குவதுமாக இந்த நிலைமை தொடர்ந்து நீடித்து வருகின்றது. மோதலுடன் தொடர்புடைய சிலர் ஏற்கனவே கைதாகி மறியலில் இருந்தாலும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு மீண்டும் ஆரம்பமான மோதல் தீவிரமடைந்ததால், இராணுவத்தினர் அந்தப் பகுதியில் களமிறக்கப்பட்டுள்ளனர். (ஓ.26)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 35வது பொதுப் பட்டமளிப்பு (பகுதி - II) விழாவைப் பிற்போடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டங்களையும், தகமைச் சான்றிதழ்களையும் வழங்குவதற்கென எதிர்வரும் 2021 செப்டம்பர் மாதம் 16, 17ம் திகதிகளில் நடாத்தத் திட்டமிடப்பட்டிருந்த 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியினை நாட்டின் தற்போதைய கொவிட் 19 சூழ்நிலை காரணமாக எதிர்வரும் 07 ஆம் 8 ஆம் திகதிகளில் நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய கொவிட் 19 சூழ்நிலை தொடருமாயின், மாற்று ஏற்பாடாக பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் (Virtual) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 2021–10–07ஆந் திகதி நடாத்துவதற்கும், நிகழ்வுகளை நேரலையாக ஒளிபரப்பு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பட்டமளிப்பு விழாத் தொடர்பான மேலதிக விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

**பதிவாளர்,**
யாழ். பல்கலைக்கழகம்
08.09.2021


# மணிவிழா வாழ்த்து 09.09.2021

## திருமதி மோகனராணி பாலச்சந்திரன்

(உப அதிபர் - SLTS-I)



இன்று தனது அறுபதாவது பிறந்த தினத்தில் 33 வருட சேவையை நிறைவு செய்து ஓய்வுபெறும் எமது பாடசாலையின் உப அதிபர் அவர்களை இறைவனின் ஆசியுடன் நீண்ட ஆயுளோடு ஆரோக்கியமாக வாழ பிறந்தநாள் வாழ்த்துக்களோடு சேவைநலன் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சேவை விபரம்:**

| | |
|---|---|
| யா/சரசாலை தெற்கு அ.த.க. பாடசாலை | : 17.08.1988-31.12.1991 (ஆசிரியர்) |
| கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலைசாலை | : 01.01.1992 - 31.12.1993 |
| யா/சரசாலை சிறிகணேசா வித்தியாலயம் | : 01.01.1994 - 31.12.2002 (ஆசிரியர்) |
| யா/மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் | : 01.01.2003 - 01.02.2015 (ஆசிரியர்) |
| யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம் | : 02.02.2015 - 08.09.2021 (உப அதிபர்) |

மட்டுவில் மண்ணின் மரகதமே
மாணவர் மேன்மைக்கான விடிவெள்ளியே
பணியிலே நல் ஆசானாகி எம் பள்ளியிலே
உப அதிபராக இறுதியாக சேவை செய்து
ஓய்வு பெறும் ஓயாத சேவகியே
பெருமை கொள்கிறது எம் கல்விச்சாலை
அருமையாக அமைந்ததே உமது நிர்வாகம்
ஆசிரியர்களின் திறன்கள் அறிந்து
வளர்த்துவிட்ட வான்மதியே
ஏங்கிநிற்கின்றோம் விடை அனுப்பிட
வயதுத் தடை இல்லை எனில்
வாழும் வரை உப அதிபராகக் கண்டிருக்கும்
எம் பள்ளியும் பல ஏற்றம் கண்டிருக்கும்
நல் பாடசாலையாய் இன்று எம் பள்ளி உயர
ஓயாது பணி புரிந்தவரே
இந்நாமம் கொள்ள உம் நாமம் காரணம்
உண்மை உலகறியும்
வந்து வந்து போங்கள்
அம்மணியே!
எப்போதும் எம் பள்ளிக்கு ஆலோசகராய்
வரவேற்க ஆவலுடன் நாம்.



**வாழ்த்துவோர்:**
**பாடசாலைச் சமூகம்**
**யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானில் தலிபான்களின் இடைக்கால அரசாங்கம்!

## பிரதமராகிறார் முல்லாஹ் ஹசன் அகுந்த்

**காபூல், செப்.09**

**ஆப்கானிஸ்தானின் இடைக் கால அரசாங்கத்தை நிறுவுவதாக தலிபான்கள் நேற்று முன் தினம் அறிவித்துள்ளனர்.**



ஆப்கானிஸ்தானை தலிபான்கள் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து மூன்று வாரங்கள் கடந்த பின்னரும் ஆட்சியமைப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. பல் வேறு தரப்புகளுடன் ஆட்சியமைப்பது பற்றி தலிபான்கள் ஆலோசனையில் ஈடுபட்டதாலேயே இவ்வாறு ஆட்சியமைக்கும் நடவடிக்கைகள் தாமதமானதாகக் கூறப் பட்டது. இந்த நிலையில் முல் லாஹ் ஹசன் அகுந்த் தலைமையிலான இடைக்கால அரசாங் கத்தை அமைப்பதாக தலிபான் கள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தலிபான்களின் செய்தித்தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் காபூலில் தெரிவித் தவை வருமாறு-

"ஆப்கானிஸ்தானில் அமையவுள்ள தலிபான்களின் இடைக் கால அரசாங்கத்தில் முல்லாஹ் ஹசன் அகுந்த் பிரதமராகவும், தலிபான்களின் முக்கியமான தலைவர்களில் ஒருவரான முல்லா பரதர், துணைப் பிரதமர் களில் ஒருவராகவும் இருப்பார்.

அத்தோடு வெளியுறவுத் துறை துணைஅமைச்சராக ஷேர் முகம்மது அப்பாஸ் ஸ்டானிக்சாய், உள்துறை அமைச்சராக சிராஜுதீன் ஹக்கானி , பாதுகாப்பு அமைச்சராக முல்லா யாக்கூப் ஆகியோர் பதவியேற்கவுள்ளனர். நாட்டை நிர்வகிப்பதற்கான இடைக்கால ஏற்பாடாக இந்த அமைச்சரவை அமைக் கப்படுகிறது. ஆப்கானிஸ்தானில் தற்போது நடைபெறும் போராட்டங்கள் சட்டவிரோதமானவை. தற்போது ஓர் அரசாங்கம் அமைக் கப்படும் நிலையில், அதனிடம் தான் மக்கள் தங்கள் குறைகளைத் தெரிவிக்க வேண்டும் " என்றார். தலிபான்களின் இடைக் கால அரசாங்கத்தில் பிரதமராகப் பொறுப்பேற்கவுள்ள முல்லாஹ் ஹசன் அகுந்த், பழங்குடியினத்தைச் சேர்ந்தவர். அத்தோடு தலிபான் அமைப்பின் நிறுவுநரான முல்லா ஓமருக்கு மிக நெருக்கமானவராக இருந்தவர். இஸ்லாம் மதத்தின் தீவிரப் பற்றாளரான அகுந்த், பழமைவாத எண்ணங்கள் நிரம்பியவர். தலிபான்களுக்கு ஆலோசனை வழங்கிடும், உயர்மட்ட முடிவுகளை எடுக்கும் மதகுருமார்கள் அடங்கிய சூரா கவுன்சிலில் ஏறக்குறைய 20 ஆண்டுகள் அகுந்த் இருந்தார்.

முல்லா ஓமரின் 1995-2001ஆம் ஆண்டு வரையான ஆட்சியில் தலிபான்களின் வெளியுறவுத் துறை அமைச்சராகவும், துணைப் பிரதமராகவும் முல்லாஹ் ஹசன் அகுந்த் செயற்பட்டுள்ளார். தலிபான் அமைப்பை முல்லா ஓமருடன் சேர்ந்து நிறுவியர்களில் முல் லாஹ் ஹசன் அகுந்தும் ஒருவர். தலிபான்களின் ஆட்சியில் 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற பார்மியன் புத்தர் சிலை தகர்ப்பின் சூத்திரதாரியும் இதே முல்லாஹ் ஹசன் அகுந்த் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# உலகிலேயே முதன்முறையாக குழந்தைகளுக்கும் தடுப்பூசி!

## கொரோனாவைத் தடுக்க கியூபாவின் வியூகம்



ஹவானா, செப்.09

உலகிலேயே முதன்முறையாக குழந்தைகளுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை கியூபா தொடங்கியுள்ளது.


கனடா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளில் 12 வயதுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்துவதற்குப் பரிசோதனைகள் நடத் தப்பட்டன. இந்த நிலையில் 2 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை கியூபா தொடங்கியுள்ளது. கியூபாவின் மத்திய மாகாணத்தில் முதன்முறையாக நேற்றுமுன்தினம் முதல் இந்தத்திட்டம் முன்னெடுக் கப்பட்டு வருகிறது என்று கியூபா அரசாங்கம் அறிவித்துள்ளது. கியூபாவில் அப்டாலா, சோபேரானா ஆகிய கொரோனாத் தடுப்பூசிகள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளன. சீனா, ஐக்கிய அமீரகம் உள்ளிட்ட நாடுகளும் குழந்தைகளுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தத் திட்டமிட்ட நிலையில், கியூபா அதனைச் செயற்படுத்தியுள்ளது. பாடசாலைகளை விரைவாகத் திறப்பதற்காகவே இந்த நடவடிக்கையில் கியூபா இறங்கியுள்ளது. இதேவேளை, உலக சுகாதார நிறுவனத்தால் அங்கீகரிக் கப்படாத, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளை கியூபா செலுத்தி வருகிறது என்று இன்னொரு தரப்பு குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வாட்டும் வெப்பத்தால் கருகித் துடிக்கும் சீனா

பீஜிங், செப்.09

சீனாவில் ஜூலை மாதம் முதல் தொடர்ந்து வெப்பமான வானிலை நிலவுவதால் , வடமேற்கு சீனாவின் கன்சு மாகாணத்தில் உள்ள பல மாவட்டங்கள் வறட்சியை எதிர்கொண்டுள்ளன. இதன் காரணமாக சுமார் 10 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 60,000 ஹெக்ரெயர் பரப்பளவிலான விவசாயப் பயிர்கள் கருகி, நாசமாகியுள்ளன. அடுத்த மாதம் வரை வறட்சியான காலநிலை தொடரும் என்பதால், பாதிப்புக்கள் இன்னும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

காலநிலை மாற்றத்தாலேயே சீனாவில் மோசமான அளவு மழை வெள்ளம், வறட்சி, காட்டுத் தீ ஆகியவை ஏற்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஏற்கனவே மேற்கு ஐரோப்பாவின் ஜேர்மனி, நெதர்லாந்து, லக்சம்பர்க், பெல்ஜியம், ப்ருசல்ஸ் ஆகிய நாடுகளிலும் காலநிலை மாற்றத்தால் பெரும் இயற்கை பேரிடர்கள் நிகழ்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (அ)



# தீப்பிடித்தது சிறை 41 கைதிகள் சாவு!

ஜகார்த்தா, செப்.09

இந்தோனேசியாவின் பாண்டன் மாகாணத்தில் உள்ள டேங்கராங் சிறையில் திடீரென ஏற்பட்ட தீவிபத்தால் 41 கைதிகள் உடல் கருகி மாண்டனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது.

டேங்கராங் சிறையில் போதைப்பொருள் கடத்தல் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

மொத்தம் 1,225 கைதிகளை அடைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இந்தச்சிறையில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான கைதிகள் அடைக் கப்பட்டிருந்தனர். இந்நிலையில், சிறையில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தில் 41 கைதிகள் பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயமடைந்த மேலும் 40 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் [illegible] தீ விபத்து [illegible] (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 . 09 . 1944 |  | 08 . 09 . 2021 |

### ஸ்ரீமதி சரஸ்வதி யோகீஸ்வரசர்மா

மணற்காடு, காரைநகரை பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி சரஸ்வதி யோகீஸ்வரசர்மா நேற்று (08.09.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் அமரர்கள் ஹரிஹரசாஸ்திரிகள்-தெய்வானைஅம்மா தம்பதியரின் மகளும், அமரர்கள் சுப்பிரமணியசர்மா பார்வதி அம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற யோகீஸ்வர சர்மாவின் அன்பு மனைவியும் சந்திரமௌலீஸ்வரக்குருக்கள் (கொழும்பு) ரமணி (ஓய்வுநிலை ஆசிரியர்) வசந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஹன்பாபு (HNB சுன்னாகம்) அவர்களின் அருமைத் தாயாரும், ரம்யா அவர்களின் அன்பு மாமியாரும், அத்வைதா அவர்களின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2021) வியாழக்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, நல்லூர் செம்மணி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**56, மூத்தவிநாயகர் வீதி,**
**1ம் ஒழுங்கை,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**யோ.சுஹன்பாபு (மகன்)**
**077 880 2757**

# மரண அறிவித்தல்



## குமாரு பரமேஸ்வரி

வீமன்காமத்தை பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரு பரமேஸ்வரி நேற்று (08.09.2021) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை பாக்கியம் தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்ற சின்னத்துரை குமாருவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தேவராசா குணரத்தினம் மற்றும் செல்வராசா அழகரத்தினம், சுந்தரம், புலேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், கமலநாதன், காலஞ்சென்ற விமலநாதன் மற்றும் ஜெகநாதன், ஜெயந்தி மாலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராஜினி, யோகமதி, காலஞ்சென்ற சிவயோகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், தனுசன், கோபிதாசன் பிறேமினி, சிந்துயா, மகோதரராசா, ராமகிருஸ்ணராசா, துர்க்கா, துவாரகா, கம்ஷா, திவ்யா ஆகியோரின் அருமை பேர்த்தியாரும், தட்ஷாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2021) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.30 மணிக்கு சங்கம்புலவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்:**
**கு.கமலநாதன் (மகன்)**
**077 1510306**

# மரண அறிவித்தல்



## அண்ணாமலை குலசிங்கம்
### (குலசி-பிரகாஸ் ரான்ஸ்போட் உரிமையாளர்)

குரும்பசிட்டியை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாஸ் ரான்ஸ்போட் உரிமையாளர் அண்ணாமலை குலசிங்கம் கடந்த (04.09.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாமலை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இரட்ணசிங்கம் - மனோண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், இரட்ணராணி இன் அன்புக் கணவரும், தாட்சாயினி (கொழும்பு) விபூசனன் (கனடா), தாரகா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் கந்தசாமி (கனடா), சரஸ்வதி (கனடா), கயிலைநாதன் (கொழும்பு), சத்தியதேவி (கனடா), சறோஜினிதேவி ((சுவிஸ்), சகுந்தலாதேவி (சுவிஸ்), தேவராணி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உமாவதி (பிரான்ஸ்), கருணாவதி, இரத்தினம், காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் பாலகுருநாதன், கிருஷ்ணமூர்த்தி, சிவலிங்கம், ஸ்ரீகாந்தராஜா ஆகியோரின் மைத்துனரும், கபிசன், சஞ்சனா, அவீசா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.09.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ராஜா மில் ஒழுங்கை,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## அமரர் அமுதலிங்கம் குணரத்தினம்மா

### (ஓய்வுபெற்ற ஆசிரியை யாழ்/உரும்பிராய் இந்துக் கல்லூரி)



**தோற்றம் : 21.02.1939 மறைவு : 07.09.2021**

யாழ்ப்பாணம் கோண்டாவில் வடக்கு கோகுல வீதியை பிறப்பிட மாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் அமுதலிங்கம் குணரத்தினம்மா அவர்கள் கடந்த (07.09.2021) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாரிமுத்தர்-மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அமுதலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சிங்கராஜா, சுந்தரமூர்த்தி மற்றும் பரமேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அன்னலிங்கம், செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும், கேதீஸ்வரலிங்கம், குமுதினி, நளாயினி, லோஜினி, சறோஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவாஜினி, இராஜேந்திரன், சிற்சபேசன், மயூரன், ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், சாமினி, சரண்யா, சிந்தியா, சுஜிவன், சகாணா, அஜந்தா, பிருந்தா, சிந்தூரன், சிந்துஜன், சிந்துராஜ், நிரூசன், இசைப்பிரியன், மயூரி, லோசன், வைஸ்ணவி, சாங்கவி, சாம்பவி, அச்சுதன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் சுகாதார விதிமுறைப்படி நேற்று (08.09.2021) புதன்கிழமை நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கோகுல வீதி,**
**கோண்டாவில் வடக்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**மகள்-குமுதினி,**
**மருமகன் - இராஜேந்திரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூங்கிய காவலர்கள்; தப்பித்தனர் கைதிகள்

சிறைக்காவலர்களின் தூக்கத்தைப் பயன்படுத்தி, பலத்த பாதுகாப்பு நிறைந்த இஸ்ரேலின் கில்போவா சிறையிலிருந்து பலஸ்தீனத்தை சேர்ந்த 6 சிறைக் கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

இது குறித்து இரகசியக் கமராப் பதிவுகளைப் பரிசோதனை செய்தபோது, சிறைக்காவலர்கள் ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கும் சமயத்திலேயே சுரங்கத்தைத் தோண்டி கைதிகள் தப்பித்துள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து சிறைக்காவலர்கள் கூண்டோடு இடைநிறுத்தப்பட்டுள்ளனர். (அ)


## யாழ்ப்பாணம்
## மாநகர சபை
## விளம்பர ஒலிபரப்புச் சேவைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபையினால் 03.07.2021 ம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கும் கீழ் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கும் அமைய இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள விளம்பரசேவைகள் **01.10.2021** திகதி முதல் **30.09.2022** ம் திகதி வரையான ஒருவருட காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் பெறுகைக்குழு யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

**கேள்விப்படிவக் கட்டணம்** :- 1,000.00
**கேள்விப்படிவம் விநியோகித்தல்** :- **10.09.2021 – 23.09.2021**
**கேள்விப்படிவம் ஏற்றுக்கொள்ளல்** :- **24.09.2021** மு.ப 10.00 மணி
**கேள்வி மூடுதல்/திறத்தல்** :- **24.09.2021** மு.ப **10.00** மணி

| இல | கேள்வி அடையாள இலக்கம் | ஒலிபரப்பு விபரம் | மதிப்பிடப்பட்ட ஆகக் குறைந்த கேள்வித் தொகை (ரூபா மில்லியன்) | ஒப்பந்த காலம் | மீளளிக்கப் படாத தொகை ரூபா | கேள்வி பிணை முறி விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தொகை ரூபா | செலுத்தியிருக்கும் காலம் |
| 1 | MC/N.M.B/F-08/B.01/2021 | நவீனசந்தை கட்டிடத் தொகுதி மேல்மாடி | 1 மில்லியன் (1,000,000.00) | 1 வருடம் | 1,000.00 | 20,000.00 | 09.12.2021 |
| 2 | MC/S.M/F-08/B.02/2021 | செங்குந்தா சந்தைத் தொகுதியில் - மீன்சந்தைக்கு மேல் | 0.35 மில்லியன் (350,000.00) | 1 வருடம் | 1,000.00 | 7,000.00 | 09.12.2021 |

- மேலதிக தகவல்களை நானாவித இறைவரிப்பகுதியுடன் தொலைபேசி இலக்கம் 0212215978 தொடர்புகொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 3.00 மணிவரை நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைக்குழு,
மாநகரசபை யாழ்ப்பாணம்.



## யாழ்ப்பாணம் மாநகரசபை
## யாழ்ப்பாணம் நவீன சந்தையின் மேற்றளத்தின் நிலப்பகுதிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வாடகைக்கு வழங்குவதற்கான விலைமனுக் கோரல்

1. யாழ்ப்பாணம் நவீன சந்தையின் மேற்றளத்தின் கீழ்வரும் நிலப்பகுதிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| நிலப்பகுதி | தரைப்பிரதேசம் (சதுர அடி) | அடிப்படை விலை (ரூபா) | மாதாந்த வாடகை (ரூபா) | பிணைமுறி (ரூபா) |
|---|---|---|---|---|
| A | 3440 | 20,400,000.00 | 85,000.00 | 300,000.00 |
| B | 3440 | 20,400,000.00 | 85,000.00 | 300,000.00 |

2. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களில் அதிகூடிய அடிப்படை விலையைக் கவனத்தில் கொண்டு குத்தகைதாரர் தேர்ந்தெடுக்கப்படுவார்.
3. கேள்விதாரர் பின்வரும் நிபந்தனைகளை கருத்தில் கொள்ள வேண்டும்.
   I. தங்களின் தேவைக்கேற்ற வகையில் அப்பகுதியை மாற்றியமைக்க முடியும். (கூரை திருத்த வேலை மட்டும் மாநகரசபையால் மேற்கொள்ளப்படும்)
   II. ஒப்பந்த கால முடிவில் எந்தவித நிபந்தனையுமின்றி மாநகரசபைக்கு கையளித்தல் வேண்டும்.
   III. தங்களது வியாபாரத்தின் தன்மைக்கேற்ப கழிவகற்றும் செயற்பாட்டிற்கு வசதியாக வரைபடத்தில் Open to Sky எனக் குறிப்பிடப்பட்ட பகுதியில் தங்களது சொந்த செலவில் கழிவகற்றும் தொட்டியை அமைக்க முடியும். அத் தொட்டியில் சேர்க்கப்படும் கழிவை கட்டணம் செலுத்தி அகற்றிக் கொள்ளலாம். தங்களது பகுதிக்கு ஒதுக்கப்பட்ட மலசலகூடத்தின் பராமரிப்பு பணிகள் தங்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விண்ணப்பதாரிகள் குறித்த விபரங்கள் உள்ளடக்கிய விண்ணப்பங்களை, மீளளிக்கப்படாத ரூபா2000/= இனை செலுத்தி மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியில் **2021.09.10ம் திகதி முதல் 2021.10.30 ம் திகதி வரை** வாரத்தின் வேலை நாட்களில் மு.ப9.00 முதல் பி.ப2.30 வரையான காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.
5. விண்ணப்பதாரர் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படும் தொகையை பிணைமுறியாக செலுத்துதல் வேண்டும்.
6. விலை மனுக்களை **ஆணையாளர், மாநகரசபை ,யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்/நானாவித இறைவரிப்பகுதியில் கேள்விப் படிவங்களை ஏற்கும் பெட்டியில் இடுமாறு கோரப்படுகின்றது. அத்துடன் தபால்உறையின் மேல் மூலையில் கேள்வியின் விபரம் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலை மனுக்களை ஏற்றல் **2021.10.01ம் திகதி பி.ப2.30** மணிக்கு முடிவடைந்ததுடன் மாநகரசபையின் பௌதீக திட்டமிடல் கேட்போர் கூடத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். விண்ணப்பதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் இதற்கு சமூகமளிக்கலாம். குறித்த நேரத்தின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
8. இது பற்றிய மேலதிக தகவல்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம் மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியின் 021 221 5978 தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது அலுவலக நேரங்களில் மு.ப9.00 மணி முதல் பி.ப3.00 வரை நேரில் தகவல்களை பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்,
பெறுகைக்குழு,
யாழ்ப்பாணம் மாநகரசபை

08.09.2021


# கொரோனா தகவல்களுக்கு புதிய தொலைபேசி இலக்கம்

சாவகச்சேரி, செப். 9

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசத்தில் வசிப்பவர்கள், கொரோனாத் தொற்றுத் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு புதிய தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை இதனை அறிமுகப்படுத்தியுள்ளது. 0214363456 என்ற தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தி, 24 மணித்தியாலங்களும் பொதுமக்கள் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம4,159)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 10.08.2021 அன்று
இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்

**சிவஞானசுந்தரம் தங்கராசா**

(ஓய்வுபெற்ற வேலைப் பரிசோதகர் மற்றும் கொக்குவில் தொழில்நுட்பவியல் கல்லூரி முன்னாள் வருகை விரிவுரையாளர்)

மீளாத் துயில் கொண்டு எமை ஆறாத் துயரில்
ஆழ்த்திச் சென்ற உம் கலையாத நினைவுகளுடன்
உதிரும் கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர்த் துளிகளை காணிக்கையாக்குகிறோம்.

எமது குடும்பத் தலைவர் நோயுற்றிருந்தபோதும், மறைவுச் செய்தி அறிந்தபோதும், நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும், மரணச் சடங்கில் உறுதுணையாக நின்று செயற்பட்ட அயலவர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்

நாட்டில் நிலவும் அசாதாரண நிலைமை காரணமாக
நினைவஞ்சலி நிகழ்வுக்கு அழைக்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

சிவன் வீதி,
ஆவரங்கால், புத்தூர்.

குடும்பத்தினர்.



## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
18
02
1945



மறைவு
04
09
2016

அமரர் **V.P.வேலாயுதம்பிள்ளை**

(முன்னை நாள் உதவி அரசாங்க அதிபர்)

திதி : வளர்பக்க திருதியை

தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தில் வந்துதித்த அப்பாவே - உம் பிரிவை
ஆற்றோம் எம் ஐயா அழுகின்றோம் ஓவென்று
தேற்றுவார் யாருமில்லை தேறுவதற்கும் வழியில்லை
மாற்றமாம் வையகத்து நியதியென நினைந்து
இறைவன் திருவடியில் இன்புற்றிருக்கவென
வேண்டி மனம் ஆறுகின்றோம்.

இல.35/6, குமாரசாமி வீதி,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.



## ஆழ்ந்த அனுதாபங்கள்



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்தியில் அதீத
அக்கறை எடுத்து பெரும் நிதி உதவி செய்த சாவகச்சேரி கோயில்
குடியிருப்பு "கவமதி" என்னும் முகவரியை சேர்ந்த
**பொன்னம்பலம் நவரத்தினம் குடும்பத்தின் தலைவி**

**திருமதி நவரத்தினம் கோமதியம்மா**

(முன்னாள் ஆசிரியர் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**தென்மராட்சி அபிவிருத்திக் கழகம்**
**சாவகச்சேரி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொரோனா...

கொரோனாத் தொற்றால் வடக்கில் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் இந்த இரு மாவட்டங்களிலுமே அதிகளவானோர் உயிரிழந்துள்ளனர். இந்த மாதத்தின் முதல் வாரத்திலேயே அந்த எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

முடக்கம் அறிவிக்கப்பட்டாலும் மக்கள் வழமைபோன்று நடமாட்டங்களில் ஈடுபடுகின்றனர். கொரோனாவின் ஆபத்தை அவர்கள் பொருட்படுத்தவில்லை என்று சுகாதாரத் தரப்பினர் குற்றம் சுமத்துகின்றனர்.

இதேவேளை வவுனியா மாவட்ட மருத்துவமனையில் தினமும் 15 சடலங்கள் வரையில் சராசரியாக தேங்குவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் இதை ஒத்த நிலைமையே காணப்படுகின்றது. (ஓ.5-110)

## கருத்தரிப்பதை...

பதை தாமதப்படுத்துமாறு சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பெண்கள் மருத்துவ வல்லுநர் ஹர்ஷா அத்தப்பத்து வலியுறுத்தினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கொரோனா வைரஸின் டெல்டா திரிபு பரவுவதால் தாய் மற்றும் சேயின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார். (ஓ-இ)

## யாழ்ப்பாணத்தில்...

க.மகேசன் தெரிவித்தார். யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:

60 வயதுக்கு மேற்பட்டோர் தடுப்பூசி பெறுவதில் தயக்கம் காட்டுவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் இறப்புகளும் அதிகரித்துள்ளன. தடுப்பூசி ஏற்றுவதற்குத் தயக்கம் காட்டக் கூடாது. தடுப்பூசி ஏற்றுவதன் மூலமே உயிரிழப்பை தவிர்க்க முடியும், என்றார். (ஓ-26)

## அபிவிருத்தி...

மற்றும் கண்காணிப்பு அமைச்சராக மேலதிக பொறுப்பேற்றுள்ள நிலையில், அரசின் அனுசரணையில் யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை நேரில் கண்காணித்து அவற்றை துரிதப்படுத்தும் நோக்கிலேயே அவரது இந்தப் பயணம் அமையவுள்ளது. தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள நிலையில், அமைச்சரின் வருகையை முன்னிட்டு எவ்வித விசேட நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படமாட்டாது என்று ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ.5)

## மாகாண...

விடயங்கள் எனக்குத் தெரியும். கட்சி நலன் கருதி நான் அவை பற்றி பொது வெளியில் பேசியதில்லை. அதனால் நான் பலவீனமானவன் என்று யாரும் கருதக்கூடாது- இவ்வாறு வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும் உள்ளூர் தொலைக்காட்சி நேர்காணலில்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடமாகாண சபையைக் குழப்பு வதில் அனுபவம் வாய்ந்த சீ.வி.கே.சிவஞானமும் கவனம் செலுத்தினார் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

17 உறுப்பினர்களுடன் சேர்ந்து மாகாணசபையைக் கலையுங்கள் என்ற கடிதத்தை ஆளுநரிடம் நான் கையளித்தமையையே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் என்மீதான குற்றச்சாட்டாக முன்வைத்தார். இது தொடர்பில் நான் பல தடவைகள் தெளிவுபடுத்திவிட்டேன். அந்தக் கடிதத்தில் மாகாணசபையைக் கலைக்குமாறு குறிப்பிடவில்லை. முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லை என்றுதான் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தை எங்கோ தயாரித்துவிட்டு என் கையில் திணித்து, என்னை அதில் பலிக்கடா ஆக்கிவிட்டார்கள். இதனைப் பலதடவைகள் நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கூறுவதைப்போல, இந்த விடயங்கள் ஒன்றும் கட்சித்தலைவர் மாவை. சேனாதிராசாவுக்குத் தெரியாமல் நடைபெறவில்லை. அவர் கட்சித் தலைமையகத்தில் இருக்கும்போதுதான் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கையெழுத்துப் பெறப்பட்டது. இந்தக் கைங்கரியத்தை முன்னெடுத்தவர்கள் வேறு எங்கேயோ கூடித்தயாரித்த வரைபை அவரிடம் காட்டிய பின் மாற்றியமைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

நான் அவைத்தலைவர் மட்டும்தான் என்பதையும் நிர்வாக விடயத்தில் நேரடிப் பொறுப்பு எதுவும் கொண்டிருக்கவில்லை என்பதும் சாதாரண அறிவுக் கெட்டிய விடயம்.

மாகாண சபை நிர்வாகத்தை யார் யார் குழப்பினார்கள்? எவற்றை எல்லாம் குழப்பினார்கள்? அவற்றின் பின்னணியில் யார் யார் இருந்தார்கள்? என்ற நூற்றுக்கணக்கான விடயங்கள் எனக்குத் தெரியும். கட்சி நலன் கருதி நான் அவை பற்றி பொது வெளியில் பேசியதில்லை. அதனால் நான் பலவீனமானவன் என்று யாரும் கருதக் கூடாது.

இப்பொழுது நடப்பது போல தமிழ் அரசுக் கட்சிக்குள் 'சேம்சைட்' கோல் அடிக்கும் செயற்பாடு இல்லாத வரலாற்றினூடாக வந்தவன் நான். தேவைப்படும் போது அவை பற்றி பேசுவேன். 50 வருடத்துக்கு மேலான அரசியல் மற்றும் மக்கள் சேவை அனுபவமும் 20 வருடத்துக்கு மேலான தேர்தல்களைச் சந்தித்த அனுபவமும் எனக்குண்டு என்பதை நான் கூறியாக வேண்டும்- என்றார். (ஓ.5)

## யாழ்.பல்கலை...

டுள்ளது. முன்னதாக இந்த மாதம் 16ஆம், 17ஆம், 18ஆம் திகதிகளில். பட்டமளிப்புவிழா நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

அது தற்போது இடைநிறுத்தப்பட்டு அடுத்த மாதம் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளுக்கு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ளது.

'யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதியை இம்மாதம் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டின் தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பட்டமளிப்பு விழா ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்காக பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் குழு நேற்று 8 ஆம் திகதி புதன்கிழமை காலை துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் கூடியது.

தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராய்ந்த குழு, நாட்டின் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு பட்டமளிப்பு விழாவை அடுத்த மாதம் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை யாழ். பல்கலைக்கழகஉள்ளகவிளையாட்டரங்கில் நடத்துவதெனத் தீர்மானித்துள்ளது. எனினும் சூழ்நிலைகளைப் பொறுத்து குறித்த தினங்களில் பட்டமளிப்பு விழாவைத் திட்டமிட்டபடி பட்டதாரிகளுடன் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டால் மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி பட்டங்களை உறுதிப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலைக்கு மாற்றுவது தொடர்பான இறுதித் தீர்மானம் இம்மாதம் 23 ஆம் திகதி அறிவிக்கப்படும்' என்றும் அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட் டுள்ளது. (ஓ.5)

## யாழ்ப்பாணத்தில்...

ஆதார மருத்துவமனை மற்றும் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் தலா ஒவ்வொருவரும் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 66 வயதுப் பெண், கோண்டாவிலைச் சேர்ந்த 69 வயதுப் பெண், கைதடி முதியோர் இல்லத்தைச் சேர்ந்த 89 வயது ஆண் ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 85 வயது ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வரணியைச் சேர்ந்த 80 வயதுப் பெண் உயிரிழந்துள்ளார். (ஓ.5-26)

## வவுனியாவில்...

திடீர் சுகவீனம் காரணமாக வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டு கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்றுவந்தனர். இந்த நிலையில் நேற்று அவர்கள் உயிரிழந்துள்ளனர். இதேவேளை திடீர் சுகவீனமுற்ற நிலையில் வீடுகளில் சாவடைந்த 5 பேரின் பி.சி.ஆர். மாதிரிகள் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ஓ-110)

## கொரோனாத்...

மேலும் இரண்டு பெண்கள் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் எழுத்தூர் பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய பெண் ஒருவரும், எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்களுடன் சேர்த்து மன்னார் மாவட்டத்தில் இதுவரை 22 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ-4,213)

## யாழில்...

காமையே இதற்குக் காரணம் என்று யாழ். மாவட்டச் செயலக அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த மாதம் 20ஆம் திகதி அரசு முடக்கத்தை அறிவித்தது. முடக்ககால நிவாரணமாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முடக்ககால நிவாரணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 56 ஆயிரத்து 372பேருக்குத் தகுதி என்று பிரதேச செயலர்களால் பரிந்துரைக்கப்பட்டபோதும், அரசு 36 ஆயிரம் பேருக்கே கொடுப்பனவை ஒதுக்கியது. ஆனால், 27 ஆயிரத்து 94 பேருக்குரிய கட்டுநிதியே விடுவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 9 ஆயிரம் பேருக்குரிய கட்டுநிதியை இதுவரை விடுவிக்கவில்லை. (ஓ.5)

## கைதடி...

ஜென் சோதனையில் 108 முதியவர்களுக்கும், 6 பணியாளர்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இவர்களில் 5 முதியவர்கள் இதுவரை உயிரிழந்துள்ளனர். (ஓ.5-9)

## ஹன்ரரோடு...

6.45 மணியளவில் நடைபெற்றுள்ளது. கப்ரக வாகனத்தில் பயணித்த குருநாகலைச் சேர்ந்த திலக்குமார (வயது 50), கொழும்பு ஆமர் வீதியைச் சேர்ந்த சு.நிரூபன் (வயது 31) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த ஹன்ரரும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த கப்ரக வாகனமுமே விபத்துக்குள்ளாகின. கப்ரக வாகனத்தின் முன்பகுதி, ஹன்ரரின் முன்பகுதியில் சிக்குண்டு நசியுண்டு சிதைவடைந்தது.

கப்ரக வாகனத்தில் பயணித்த திலக்குமார சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். நிரூபன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட மருத்துவமனைக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு விபத்து பிரிவில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். ஹன்ரர் சாரதி சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். விபத்துக்கான காரணம் உடனடியாகத் தெரியவரவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ஓ-18,110)

## நேற்று சாவு...

ஆயிரத்து 689 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 185 பேரில் 83 பெண்களும், 102 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 2 ஆயிரத்து 915 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 74 ஆயிரத்து 778 ஆக எகிறியுள்ளது. (ஓ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹீஷ் தீக்ஷன சாதனை!

கொழும்பு, செப்.09
தனது அறிமுகப் போட்டியிலேயே சாதனைப் புரிந்து அசத்தியுள்ளார் இலங்கையின் சுழற்பந்து வீச்சாளரான மஹீஷ் தீக்ஷன.

21 வயதான மஹீஷ் தீக்ஷன நேற்று முன் தினம் நடைபெற்ற தென்னாபிரிக்க அணிக்கு எதிரான மூன்றாவதும், இறுதியுமான போட்டியில் அறிமுகவீரராகக் களமிறங்கினார்.

முதல் போட்டியில் தான் வீசிய முதலாவது பந்திலேயே தென்னாபிரிக்க ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ஜெனிமன் மலனின் விக்கெட்டை வீழ்த்தினார் மஹீஷ் தீக்ஷன .

தொடர்ந்து சிறப்பாக 10 ஓவர்கள் பந்துவீசி தென்னாபிரிக்க அணியைத் திணறடித்து , 37 ஓட்டங்களை மட்டுமே விட்டுக் கொடுத்த மஹீஷ் தீக்ஷன 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றி இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இதேவேளை தனது இறுதி ஓவரின் கடைசிப் பந்தில் தென்னாபிரிக்க அணித்தலைவர் மஹாராஜின் விக்கெட்டையும் அவர் சாய்த்திருந்தார். இதன் மூலம் தனது அறிமுகப் போட்டியிலேயே முதலாவது மற்றும் இறுதிப் பந்துகளில் விக்கெட் எடுத்த வீரர் என்ற சாதனையை மஹீஷ் தீக்ஷன தனதாக்கியுள்ளார்.(அ)

# ஆஷ்லே பார்டி வெளியேற்றம்!



**வொஷிங்டன், செப். 9**
**அமெரிக்கப் பகிரங்கத் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான ஆஷ்லே பார்டி அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார்.**

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவது சுற்று ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆஷ்லே, தரப்படுத்தலில் 43ஆவது இடத்தில் உள்ள வீராங்கனையான ஷெல்பியுடன் மோதினார். முதலாவது செற்றை 2:6 என்று இழந்த ஆஷ்லே, இரண்டாவது செற்றை 6:1 என்று கைப்பற்றினார். வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றை ஷெல்பி 7:5 என்று கைப்பற்றியதை அடுத்து 1:2 என்ற கணக்கில் வெளியேற்றப்பட்டார் ஆஷ்லே. (ம)

# தவான் - ஆயிஷா முறிந்தது உறவு!



இந்திய கிரிக்கெட் அணி வீரர் ஷிகர் தவானும், அவரது மனைவி ஆயிஷா முகர்ஜியும் விவாகரத்து செய்துவிட்டனர் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியக் கிரிக்கெட் அணியின் அதிரடி துடுப்பாட்ட வீரரான ஷிகர் தவான், ஆஸ்திரேலிய குத்துச் சண்டை வீராங்கனை ஆயிஷாவைக் கடந்த 2012ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.

ஆயிஷா ஏற்கனவே திருமண மாகி, இரு பிள்ளைகளுக்கு தாயான பின்னர் கணவரை விவாகரத்துச் செய்திருந்தார். அதன் பின்னர் ஆயிஷாவைத் திருமணம் செய்த தவான், ஆயிஷாவின் பிள்ளைகளையும் தன் பிள்ளைகளாகத் தத்தெடுத்தார். தவான் - ஆயிஷா தம்பதியினருக்கும் ஆண் குழந்தை ஒன்று பிறந்திருந்தது. இந்த நிலையில் ஷிகர் தவானும், ஆயிஷா முகர்ஜியும் விவாகரத்து செய்துள்ளனரெனத் தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக ஆயிஷா முகர்ஜி தங்களது விவாகரத்து குறித்து ஒரு நீண்ட இன்ஸ்டாகிராம் பதிவை வெளியிட்டுள்ளார். அதில்,

“விவாகரத்து என்ற வார்த்தை அழுக்கானது. நான் இரண்டாவது முறையாக விவாகரத்துச் செய்துள்ளேன். வார்த்தைகள் எவ்வளவு வலிமையானவை, எவ்வளவு அர்த்தங்கள் அதில் புதைந்திருக் கின்றன என்பதை முதல் முறை விவாகரத்து ஆகும் போது புரிந்து கொண்டேன். முதல் முறை விவாகரத்து ஆகும் போது மிகவும் பயந்தேன் நான் மிகவும் தவறான ஒரு விடயத்தை செய்வதாகவும், தோல்வி அடைந்தவளாகவும் உணர்ந்தேன். சுயநலக்காரியாகவும், அனைவரையும் காயப்படுத்தியதாக உணர்ந்தேன். என்னுடைய பெற்றோரைக் கைவிட்டதாக உணர்ந்தேன்.

என்னுடைய குழந்தைகளுக்கு அநீதி இழைத்ததாக கருதினேன். விவாகரத்து அவ்வளவு மோசமான வார்த்தை. இப்போது நினைத்துப் பாருங்கள் இரண்டாவது முறையாக நான் அதனைக் கடந்து செல்கிறேன். இது மிகவும் கொடூரமானது. இரண்டாவது முறையாக திருமணம் முறிந்த பின்னர் மிகவும் பயங்கரமாக இருந்தது. ஆனாலும் விவாகரத்தின் அர்த்தங்களைக் கற்றுக் கொண்டேன்” என்று தனது இன்ஸ்டாகிராமில் பதிவிட்டுள்ளார். ஆனால், விவாகரத்து தொடர்பாக ஷிகார் தவான் தனது நிலை பற்றி மௌனம் காத்து வருகின்றார்.

(அ)

# பீலேவுக்கு சத்திரசிகிச்சை!

சாபாலோ, செப்.09
பிரேசில் அணியின் முன்னாள் கால்பந்து ஜாம்பவானான **பீலேவுக்கு குடல் பகுதியில் சத்திரசிகிச்சை செய்யப்பட்டுள்ளது.**

உலகக் கிண்ணத்தை வென்ற பிரேசில் கால்பந்து அணியில் 3 முறை இடம் பிடித்தவர் பீலே. ஏராளமான கால்பந்தாட்ட வீரர்களின் ஆதர்சக் குருவாகவும் விளங்கும் பீலேவுக்கு இப்போது 80 வயது. அவர் சாபாலோவில் உள்ள மருத்துவமனையில் உடல்நலக் குறைவால் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டார். அங்கு மருத்துவப் பரிசோதனை செய்தபோது, அவருக்கு குடல் பகுதியில் ஒரு கட்டி இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து உடனடியாக அவருக்கு சத்திரசிகிச்சை செய்து அந்தக் கட்டி அகற்றப்பட்டது. சத்திரசிகிச்சைக்குப் பிறகும் பீலே தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார். தற்போது அவர் நல்ல உடல்நிலையுடன் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

**வீடு வாடகைக்குத் தேவை**

யாழ் நகரை அண்மித்த பகுதியில் இருவர் கொண்ட குடும்பத்துக்கு மாத வாடகை 10, 000 - 15, 000க்கு உட்பட்ட வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு : 077 9592 628

**கண்ணீர் அஞ்சலி**

பிறப்பு 11 . 05 . 1944



இறப்பு 04 . 09 . 2021

எமது நண்பரும் V.S.S நல்லெண்ணெய் வடமராட்சி முகவருமான

**குழந்தைவேலு நடராசா**

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வ.ச. சுந்தரலிங்கம் (உரிமையாளர்)
V.S.S. நல்லெண்ணெய் நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.